விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 229 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை (04.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## எமது ஆட்சியில் திருட்டுக்கு எவ்விதமான இடமுமில்லை

### எதிர்க்கட்சித் தலைவர்




(கம்பஹா)

எமது அரசாங்கத்தின் கீழ் திருட்டுக்கு இடமில்லை எனவும் அவ்வாறானவர்களை மன்னிக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற ரணவிரு மாநாட்டில் 19

## மன்னார் மகப்பேற்று விடுதியில் பெண் மருத்துவருடன் முரண்பாடு

### மருத்துவர் அர்ச்சுனா கைதாகி மறியலில்



(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதிக்குள் நுழைந்து பெண் மருத்துவருடன் முரண்பட்ட மருத்துவர் அர்ச்சுனா பொலிஸாரால் கைதாகி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர் 19

# இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## யாழில் ஜனாதிபதி ரணில்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனை தானும் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். 04

### சுதந்திரக் கட்சியின்

## தயாசிறி அணி சஜித்துக்கு ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி தரப்பினரின் ஆதரவை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

அனைத்துத் தொகுதி அமைப்பாளர்களும் நேற்று கொழும்பில் ஒன்றுகூடி 19

### நெடுந்தீவில் மரணமான

## தமிழக மீனவரின் சடலம் ஒப்படைப்பு

### மற்றைய இரு மீனவர்கள் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் படகு கவிழ்ந்து கடலுக்குள் மூழ்கி உயிரிழந்த மீனவரின் சடலம் நேற்று அதிகாலை கடல் வழியாக இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திற்கு 19

## ஹயஸ் மோதியதில் பெண் உயிரிழப்பு

### சுன்னாகத்தில் சம்பவம்


(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

சங்கானைப் பகுதியைச் சேர்ந்த ஆனந்தன் சிவானந்த கௌரி என்ற 51 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 19

## 176 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சியில் மூவர் கைது



(கிளிநொச்சி)

176 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சியில் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக் 19

## சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா 19

## முல்லைத்தீவில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - செம்மலைப் பகுதியில் உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு பிரதேச 19

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

பட்டறை பிரிந்தகுளம் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய இராசையா நாகராசா 19

## தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக 45 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில், பெஃப்ரல் என்ற சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை மையத்துக்கு, 45 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளின் கீழ், அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1955.11.26 | மறைவு 2023.08.16

**அமரர் இராமசாமி சண்முகசுந்தரம் (Shan)**

**Senior Teacher English**
**Dip in English (Merit pass university of Jaffna)**
**Sp Trd in English DELIC - Trd (Vavuniya)**
**Bachelor of Arts in Social Science**

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வத்தில்
ஒன்றாகக் கலந்திருக்கும் எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகிறோம்.

(C-921)

புலோலி வடமேற்கு,
புலோலி.

0777 555 542

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்


## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.

(1621)

தொடர்புகளுக்கு: 076 834 6136

## வடி வாகனம் தேவை

பட்டா (வடி) வாகனம் விற்பனைக்கு இருந்தால் கீழ்க் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

(C-924)

076 526 6717

## காணி விற்பனைக்கு

சுழிபுரம் தேத்தாப்புலத்தில் வீடு கட்டுவதற்கு உகந்த காணி (காட்டுப்புலத்திற்கு அண்மையில்) பத்துப்பரப்பு மொத்தமாகவும், பிரித்தும் விற்பனைக்குண்டு.

(1615)

தொடர்பு இலக்கம் :
021 225 6118

## செந்தமிழ் வழிபாட்டுப் பயிற்சி நெறியும் வேலை வாய்ப்பும்

தென்னாடு


யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், தமிழ் வழிபாடு ஆற்றுவதற்கு அர்ச்சகர்கள் தேவை. முன்அனுபவம் இல்லாதவர்களும் பயிற்சியின் பின்னர் தக்க தீக்கைகள் பெற்று வழிபாடு ஆற்றும் தகைமையைப் பெற்றுக்கொள்ளலாம். பயிற்சிக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். பயிற்சிநெறிகள் வருகின்ற ஆவணித் திங்கள் முதலாம் நாள் அன்று (17-08-2024) ஆரம்பமாகும்.

இருக்குமிடம் வழங்கப்படும். சம்பளம் அடிப்படை 35,000 மற்றும் சிறப்பு பூசைகளுக்கு மேலதிக கொடுப்பனவுகளும் உண்டு.

(C-919)

தொடர்புகளுக்கு:
தென்னாடு சிவமடம் - 070 770 1111


# மரண அறிவித்தல்



மலர்வு 21.09.1959 | உதிர்வு 31.07.2024

## அந்தோனி அமலோற்பவநாயகம் (ஆனந்தன்)

### (பிரபல கட்டட ஒப்பந்ததாரர்)

நல்லாயன் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி அமலோற்பவநாயகம் (ஆனந்தன்) அவர்கள் 31.07.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - சலோமை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சூசை - யக்கோவா தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராயப்பு, சேவியர் மற்றும் திரவியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமல், விமல், நிமல் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷா, கசில்டா(ஆசிரியர் - யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்), சுபோ ஆகியோரின் அன்பு மாமனாரும் டியோனி, ஏமி, றீனி, றிக்ஷி, ஒமீக்கா, ஜோய்லி, நீரஜா, ஹரிஷ், நிகிதா, நிம்சி ஆகியோரின் பாசமிகு பேரனும் மலர், பற்றிமா, காலஞ்சென்ற அல்போன்ஸ் மற்றும் சேவியர், அருட்பணி அன்ரன் ஜோர்ஜ்(பங்குத் தந்தை - பளை), நேசன், காலஞ்சென்றவர்களான ஜோசவ், விக்டோரியா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் நாளை 05.08.2024 திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லாயன் வீதி,
இளவாலை.

(222)

தகவல் :
குடும்பத்தினர்
T.P: 076 472 8379

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வாகனங்கள் மோதி நுணாவில் பகுதியில் விபத்து



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

கொடிகாமத்தில் இருந்து யாழ் நோக்கிச் சென்ற குறுந்தூர பயணிகள் பேருந்து நுணாவில் பகுதியில் பயணி ஒருவரை ஏற்றுவதற்காக நிறுத்திய போது பின்னால் வந்த ஹயஸ் வாகனம் பேருந்தின் பின்புறமாக மோதி கடுமையாக சேதமடைந்துள்ளது. அதே நேரம் ஹயஸ் வாகனத்தின் பின்பாக வந்த டிப்பர் வாகனமும் ஹயஸ் வாகனத்தின் பின்புறமாக மோதியுள்ளது.

இதில் ஹயஸ் வாகனம் கடுமையாக சேதமடைந்த போதிலும் அதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பித்திருந்தனர்.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30-33)


## சேவை நலன் பாராட்டு விழா

திருமதி.சிவனேஸ்வரி வில்வராஜன்



சேவைக்காலம்

யா/ இணுவில் இந்துக் கல்லூரி
27.03.1990-08.01.2012
யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
09.01.2012-08.06.2014
யா/தாவடி இ.த.க பாடசாலை
09.06.2014-18.12.2022
யா/இணுவில் மத்திய கல்லூரி
19.12.2022-04.08.2024

ஆசிரியர் பணியில் இன்றுடன் (04.08.2024) முப்பத்து நான்கு ஆண்டுகள் தமிழ்ப்பாட ஆசிரியராக சேவையாற்றி இளைப்பாறும் உங்கள் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வாழ்த்துகிறோம். (1619)

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர் நலன்புரிச்சங்கம், யா/இணுவில் மத்திய கல்லூரி.



## விற்பனைக்கு

01. யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 50 அடி அகலமும் 600 அடி நீளமும் கொண்ட 13 பரப்பும் 5 குழியில் அமைந்த காணியும்.
02. யாழ் Brown Road இல் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 200 அடி அகலம் கொண்ட 07 பரப்புக் காணியும்.
03. யாழ். திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் HNB வங்கிக்கு முன்பாக 120 அடி அகலமும் கொண்ட ஆடியபாதம் வீதியில் 5 பரப்புக் காணியும்.
04. யாழ். அச்சு வேலியில் 100 பரப்புக் காணியும்.
05. யாழ். அரியாலை பூம்புகார் வீதியில் 100 ஏக்கர் காணியும்
06. யாழ். தனங்கிளப்பு பகுதியில் Main Road க்கு அண்மையில் 40 ஏக்கர் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 723 2535
தர்மகுலசிங்கம்.



"பொன்னகவை காணும் தீபஜோதி"
கூவில்

## தீபஜோதி சனசமூக நிலையத்தின்

50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவினை முன்னிட்டு
தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும்

## மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலை பண்பாட்டு பெருவிழாவும்- 2024

இரண்டாம் நாள் நிகழ்வு

ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

காலம்: 04.08.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை
(ஆடி அமாவாசைத் தினத்தன்று)
நேரம்: பி.ப 2.00 மணி
இடம்: தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானம்

**தலைமை**
திரு. பொ. செல்வகிருஸ்ணன்
(தலைவர், தீபஜோதி சனசமூக நிலையம்)

**பிரதம விருந்தினர்**
உயர்திரு. ஈஸ்வரானந்தன் தயாரூபன்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம் கரவெட்டி)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு. G.W.S.C. ஜெயதிலக
(உதவி பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை II பருத்தித்துறை)
செல்வி. கிறேஸ் தேவதயாளினி தேவராஜா
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, மன்னார்)
திரு. அருணகிரி வினோராஜ்
(செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை)
திரு. சதானந்தன் சர்வானந்தன்
(முகாமையாளர், மக்கள் வங்கி அச்சுவேலி)



**கௌரவ விருந்தினர்கள்**
திரு. பிரியந்த அமரசிங்க
(தலைமை பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம் பருத்தித்துறை)
திரு. போ. பா. ரோகான்
(பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம் நெல்லியடி)
திரு. இ. மண்டலேஸ்வர குருக்கள்
(பிரதமகுரு சொக்கன்கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் கூவில் கொட்டி ஞானவைரவர் ஆலயம்)
திருமதி. நதியா துஷ்யந்தன்
(கிராம அலுவலர் J/411, புலோலி தென்மேற்கு)
திருமதி. பரமேஸ்வரி யோகராசா
(ஓய்வுநிலை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்)

**நிகழ்ச்சி நிரல்**

காலை நிகழ்வுகள்
- வெளிக்கழக வீரர்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி
  40 km-காலை 06.00 மணி (இடம்-கிராமக் கோட்டு சந்தி பருத்தித்துறை)
- வெளிக்கழக வீரர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி
  15 km - காலை 06.30 மணி (இடம்-கிராமக் கோட்டு சந்தி பருத்தித்துறை)

மாலை நிகழ்வுகள்
- விருந்தினர் வரவேற்பு
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- ஆசியுரை
- கொடியேற்றல் வைபவம்
- அணிநடை
- ஒலிம்பிக் தீபம் ஏற்றல்
- வரவேற்புரை
- இல்ல விளையாட்டுக்கள்
- இடைவேளை நிகழ்வு - இசையும் அசைவும் (ஆண்கள்)
- இடைவேளை நிகழ்வு-இசையும் அசைவும் (பெண்கள்)
- வெளிக்கழக வீரர்களுக்கான 1500 m ஓட்டம்
- வெளிக்கழக வீரர்களுக்கான பலூன் உடைத்தல்
- வலைப்பந்தாட்டம் இறுதிப்போட்டி
- தலைமையுரை
- கௌரவ விருந்தினர்கள் உரை
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தீபஜோதி சனசமூக நிலையம், தீபஜோதி விளையாட்டுக் கழகம்,
தீபஜோதி முத்தமிழ் கலாமன்றம், தீபஜோதி கல்விக் கழகம். [சி-914]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப் பிரச்சினை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டியது அவசியமென்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் இன, மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒன்று பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க வேண்டும் என்பதே முதல் பிரச்சினையாக இருந்ததாகவும், கடந்த ஜூன் மாதத்தில் அந்த பிரச்சினையை நிறைவுக்கு கொண்டு வர முடிந்திருந்தமையினால் தற்போது ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது குறித்து சிந்தித்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்களின் போது இளைஞர்கள் பெரும்பாலும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பிலான கோரிக்கைகளையே முன்வைத்தனர். அதனால் வடக்கிலும், தெற்கிலும் உள்ள இளையோரின் எதிர்பார்ப்புக்களில் வேறுபாடுகள் தெரியவில்லை என்றும் கூறினார். (ம-7)

## இலங்கை – இந்தியா ஒரு நாள் போட்டி சமநிலையில் நிறைவு

இலங்கை மற்றும் இந்திய அணி களுக்கிடை யிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி சமநிலையில் நிறைவ டைந்தது.

கொழும்பு ஆர்.பிரே மதாச விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப் பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது.

231 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 47.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. இதற்கமைய குறித்த போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. (நி)


**வேலையாட்கள் தேவை**

ரயர் கடைக்கு வேலையாட்கள் தேவை.

சீலன் ரயர் கடை
சங்கானை

T.P - 077 621 6690, 076 418 9010 (1622)

**வேலையாள் தேவை**

Rajeswary Agro and Hospitality (Pvt) Ltd நிறுவனத்திற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பண்ணை பராமரிப்பாளர் தேவை (ஆண்கள்) (C-925)

தொடர்பு - 077 076 7114

**பணியாளர் தேவை (பெண்)**

யாழ்.நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு 18 –35 வயதிற்குட்பட்ட பெண் பணியாளர் தேவை. யாழ்.நகரிலிருந்து 6 KM உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (1623)

தொடர்புகளுக்கு
077 122 8841, 021 221 5777

**ஏற்க மறுக்கிறது இதயம்**

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

2024.08.04





அமரர் கந்தையா தனபாலசிங்கம்
பிறப்பு: 1931.10.18
இறப்பு: 2023.06.11

அமரர் தனபாலசிங்கம் தசாயினி
பிறப்பு: 1978.05.26
இறப்பு: 2023.07.17

ஓராண்டு கடந்து விட்டது அப்பா – ஏன்
ஓராயிரம் ஆண்டு ஆனாலும் – உங்கள்
அன்பும், அறிவுரையும், கட்டுப்பாடும்
அரவணைப்பும் வேண்டும் அப்பா!
அன்பு மகள் தசாக்குட்டியையும்
அரவணைத்துச் சென்றீர்கள் அப்பா!

மண்விட்டு விண்ணுலகம் சென்றாலும்
உங்கள் அடையாளம்
மண்ணிலே இருக்கிறது அப்பா!
மறுபிறப்பு இருந்தால் எங்கள்
வீட்டிற்கே செல்லப்பிள்ளைகளாக வாருங்கள்

ஆத்மா சாந்தி அடைய நாராயணனை
வேண்டுகிறோம் அப்பா!

(C-0923)


ஆலங்கட்டை,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3187

Search for people, places and things

### அனாமிகா





### கஜானன்




### துவாரகன்




### அக்ஷயன்




### பிரசாந்




### விதுஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடி இடம்பெற்றால் வாக்குச்சாவடி ரத்தாகும்

## தேர்தல் ஆணையாளர் அதிரடி

(கொழும்பு) —

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மோசடியான செயற்பாடுகள் இடம்பெறும் வாக்களிப்பு நிலையங்கள் இரத்துச் செய்யப்படும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



கடந்த தேர்தல்களிலும் இதேபோன்று ரத்து செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# ஆடி அமாவாசை விரதம் சூடு பிடித்த மண்சட்டி விற்பனை

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை விரதமானது தந்தையை இழந்தவர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்நிலையில் உணவுகளை சமைப்பதற்கான கறுப்பு மண்சட்டிகளின் விற்பனை சூடுபிடித்துள்ளது.

யாழ். திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு அருகாமையில் கறுப்பு மண்சட்டிகள் இவ்வாறு விற்பனையாகி வருகின்றது.

ஒரு பெரிய கறுப்பு மண்சட்டியின் விலை 250 ரூபாயில் இருந்து 300 ரூபாய் வரை விற்பனையாகி வருகின்றது.

ஒரு சிறிய கறுப்புச்சட்டியின் விலை 80 ரூபாயில் இருந்து 100 ரூபாய் வரை விற்பனையாகி வருகின்றது.

இந்நிலையில், திருநெல்வேலி பொதுச்சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்கள் மரக்கறிகளையும் கறுப்புச் சட்டியினை கொள்வனவு செய்து செல்கின்றனர். (நி)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு சாகல ரத்நாயக்க விஜயம்



(யாழ்ப்பாணம்)


ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க நேற்று மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த இரத பவனி உற்சவத்தின்போதே அவர் ஆலயத்துக்கு விஜயம் செய்துள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



எமது பல்கலைக்கழக
முகாமைத்துவப்பிரிவு
நண்பனும் இங்கிலாந்து
வாழ் எங்கள் குழுமத்தின்
முக்கிய செயற்பாட்டாளருமாகிய
திரு.ஆ.சாந்தமூர்த்தி
அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.
திருமதி. தனேஸ்வரி
ஆறுமுகம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில்
பங்குகொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (சி-917)

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
யாழ்.பல்கலைக்கழக 95/96ம் அணி நண்பர்கள்

# மொட்டு மலரும் பெரமுன உறுதி

(கொழும்பு)

மொட்டுக் கட்சியின் இருப்பு என்பது மகிந்த ராஜபக்ஷவிடம்தான் தங்கியுள்ளது. எனவே, எவர் கட்சியை விட்டு வெளியேறினாலும் கட்சி வீழ்ச்சியடையாது. ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெல்வோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் படத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றம் வந்தவர்களே கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். அவர்கள் அவ்வாறு செயற்பட்டாலும் மக்களும், கட்சி ஆதரவாளர்களும் கட்சியுடன்தான் நிற்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவிடம்தான் கட்சி இருப்பு உள்ளது. எனவே, யார் வெளியேறினாலும் கட்சி விழாது. சிலர் அரசியல் நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். அது விரைவில் தெரியவரும் என அவர் தெரிவித்தார். (நி)


## லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும்
கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974



## மணமகன் தேவை

1994, இந்து.ரேவதி, DOCTOR, Batticaloa. மணமகள் பதிவு இல: 10856. தரகர் கூலி இல்லை.
பதிவுக் கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
076 664 9401 (சி-2367)

## மணமகன் தேவை

1991, இந்து.சித்திரை, PSYCHOLOGIST.Colombo. மணமகள் பதிவு இல: 10884. தரகர் கூலி இல்லை.
பதிவுக் கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
076 664 9401 (சி-2367)

## மணமகள் தேவை

1997, இந்து.பூராடம், AUDITOR, London. மணமகன் பதிவு இல: 10858. தரகர் கூலி இல்லை.
பதிவுக் கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
076 664 9401 (சி-2367)

## மணமகள் தேவை

1990, இந்து.பூரட்டாதி EXECUTIVE, Batticaloa. மணமகன் பதிவு இல: 10876. தரகர் கூலி இல்லை.
பதிவுக் கட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
076 664 9401 (சி-2367)



Weerodara 1948

## உடனடி வேலைவாய்ப்பு

கடந்த 76 வருடங்களாக வீரோத ஸ்டேஷனரி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் எழுத்து உபகரணங்கள் தயாரிப்பிலும் சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டு வரும் முன்னனி நிறுவனமாகும். எமது தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் துறைகள் மூலம் உங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் எழுத்து உபகரணங்களை விநியோகம் செய்வதற்கு கனரக வாகன சாரதிகளும் உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர்.

(அச்சுவேலி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

யாழ்ப்பாண மாவட்டத்தில் எழுத்து உபகரணங்களை விநியோகம் செய்வதற்கு வாடகை அடிப்படையில் 10 1/2 அடி நீளம் கொண்ட, மூடிய லொறி தேவை.

மேலதிக விபரங்களிற்கு
011 285 3160 தொலைபேசி மூலம்
திருமதி. டயானாவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.


# நினைவுகூருகின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.தேவராஜா ஜெயதீபன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.
சின்னத்துரை
தேவராஜா



அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த இரங்கல்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம் (சி-918)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# இராசிபலன்

04.08.2024
ஆனி 19, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை பிற்பகல் 5.26 மணிவரை
பூசம் பிற்பகல் 2.51 மணிவரை

சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-06.04 மணிவரை
ஆடிஅமாவாசை
சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை

செல்வச் சந்நிதி முருகன்
கொடியேற்றம்

வளவன்



பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.



நண்பர்களால் வளர்ச்சி கூடும், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு.



செய்தொழிலை விருத்தி செய்யும் உருவாகும், சுப நிகழ்ச்சிகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.



தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணமொன்று ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.



சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அத்திவார மிடுவீர்கள்.



தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், கௌரவமான நாள்.



வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம்.



செல்வ நிலை உயரும் நாள், உடன் பிறப்புக்களின் வழியில் இனிய சம்பவமொன்று இடம் பெறும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.



மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.



புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

பல எண்ணங்கள் இருப்பின் ஒரு நல்ல எண்ணம் பிறக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்


# சங்குநாதம்

நாதம் 453

Viber 076 636 3378



# வாய்மொழி வாக்குறுதி வலிமையானதா?



தேர்தல் நெருங்கி விட்டது. இந்த நேரத்தில் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதில் தர்ம பிரபுகளாகச் செயற்படுபவர்கள் அரசியல்வாதிகள் என்பது எம் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆயினும் தேர்தலை மையமாகக் கொண்ட அரசியல்வாதிகளின் பேச்சையோ, செயலையோ நாம் பூரணமாக நம்புவோமாக இருந்தால் அது நிச்சயம் எம்மைப் படுகுழியில் தள்ளி விடும் என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழினம் அரசியல் தடத்தில் தோற்றுப் போவதற்கு மூல காரணமாக இருப்பதும் இந்த விடயமே.

தேர்தல் அல்லாத காலங்களைத் தவிர்த்து தேர்தல் காலங்களில் பெரும்பாண்மை அரசியல் தலைவர்களை நம்பினர் எமது தமிழ் தலைமைகள்.

இது இன்று நேற்று வந்த பராம்பரியம் அல்ல. தொண்டு தொட்டு நடைமுறையில் இருந்து வரும் நாகரிகமே.

அதாவது தேர்தல் காலம் நெருங்கியதும் எமது அரசியல் தலைவர்கள் பெரும்பாண்மை அரச தலைவர்களின் மாயஜாலப் பேச்சை நம்பி, அவர்கள் எமக்கு தீர்வு தருவார்கள் என்று எண்ணி அவரை ஆதரித்து ஆட்சிப்பீடம் ஏறப் பாடுபடுவார்கள்.

முடிவு எவ்வாறானதெனின்; "ஒப்ரேசன் சக்சஸ், பேசன்ற் இறந்து விட்டார்" என்பதைப் போன்றதே.

எங்கே எமது தலைவர்கள் பிழை விடுகிறார்கள் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க மறந்து செயற்படுவது ஒரு இனத்தையே கருவறுத்து விட்டது என்பதை அவர்கள் இன்னமும் புரியாமல் இருப்பதுதான் வேதனை.

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். ஆனை பலம் மிக்கது. அது எடுத்து வைக்கும் ஒரு அடி சறுக்கினால் தான் இனி எடுத்து வைக்கும் அடி ஒவ்வொன்றும் நிதானம்மிக்கதாய் இருக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் அடிகளை எடுத்து வைத்து இலக்கை அடைந்து விடும்.

ஆனை போலத்தான் தமிழினமும் மிகப் பலம் மிக்க இனம். ஒருமுறை, இருமுறையா? எத்தனை முறை பெரும்பாண்மை ஆட்சியாளர்களை நம்பிய தமிழினத்தின் அடி சறுக்கி விட்டது. இன்று பலம் இழந்து எவரும் கண்டு கொள்ளாத இனமாக தமிழினம் இருப்பதற்கு எம் தமிழ் அரசியல் தலைமைகளே மூல காரணம்.

ஒரு முறை அல்லது இரண்டாவது முறை பெரும்பாண்மை ஆட்சியாளர்களின் ஏமாற்று வார்த்தைகளை நம்பி ஏமாந்து போன பின்னர், இனி எம்மை ஏமாற்ற முடியாது. நீங்கள் சிறுபாண்மைத் தமிழராகிய எமக்குத் தரவல்ல தீர்வை எழுத்து மூலம் தாருங்கள். நாங்கள் உங்களை ஆதரிக்கின்றோம். தமிழினத்தின் ஒருமித்த வாக்குகளை உங்களுக்கு இட்டு உங்களை வெல்ல வைக்கின்றோம். எனக் கேட்டிருந்தால், முடிந்தால் எமக்கான தீர்வு விடயத்தை எழுத்தில் தருவார்கள் இல்லையெனின் விட்டு விலகி நிற்பார்கள்.

**“தொடர்ந்தும் நாம் பெரும்பாண்மை ஆட்சியாளர்களின் வார்த்தைகளை நம்பி ஏமாறப் போகிறோமா? அல்லது அவர்களிடம் எமக்கான தீர்வை எழுத்து மூலம் பெற்று அதனூடாக அவர்களை ஆதரிக்கப் போகிறோமா? அல்லது தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி அவரை ஆதரித்து அவருக்கு எமது ஒட்டுமொத்த வாக்குகளையும் இடப்போகிறோமா?**

இந்த இறுக்கமான அரசியல் இராஜ தந்திரத்தைக் கையாளாத தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் வெறும் வாய் வழி வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்களை குறித்த ஒருவருக்கு வாக்களிக்குமாறு கோருவது ஒரு நாளும் புத்திசாலித்தனமானதாக இருக்காது.

பெரும்பாண்மை ஆட்சியாளர்கள் வாக்குறுதிகளை தந்து விட்டு ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் எமக்களித்த வாக்குறுதிகளை தூக்கி குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு மீண்டும் எம்மிடம் ஆதரவு தாருங்கள் என வருவதற்கு யார் காரணம்? தமிழினத்தின் அரசியல் தலைமையினை முதுகெலும்பில்லாத அரசியல் தலைமை என்று ஆட்சியாளர்கள் எண்ணிய படியினாலாயே மீண்டும் மீண்டும் இவ்வாறான ஏமாற்று வித்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழினத்துக்கு தீர்வு கிடைக்கக் கூடிய பொன்னான வாய்ப்புக்களை கைவிட்டு விட்டு அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்வோம் என வெறும் வாயை மெல்வதை முதலில் தமிழ்த் தலைமைகள் நிறுத்த வேண்டும்.

எதிர்வரும் செப்டெம்பர்-21 ஜனாதிபதித் தேர்தல் என அறிவிக்கப்பட்டு விட்டது.

ஏலவே தேர்தலை மையமாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வடக்கிற்கு விஜயம் செய்திருந்த போது "நான் ஆட்சிப்பீடம் ஏறினால் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுல் படுத்துவேன் எனத் தெரிவித்திருந்தார்"

குறித்த கருத்து தேர்தலுக்கான வாக்குறுதிக் கருத்தாக இருந்த போதிலும் சஜித்தின் கருத்துக்கு தென்னிலங்கை கொதித்தெழுந்தது. அவருக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தியிருந்தது.

இங்குதான் நாம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது சிறுபாண்மைத் தமிழினத்துக்கு நீதியான தீர்வைத்தர பெரும்பாண்மையினர் ஒரு நாளும் தயாரில்லை என்பதே அது.

13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என தான் கூறவில்லை என சஜித் குறித்த கருத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்.

தற்போது தேர்தல் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து காணி, பொலிஸ் அதிகாரத்துடன் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மேற்குறித்த கருத்தும் தேர்தலை மையமாகக் கொண்ட கருத்தாகவே பார்க்கப்படுகிறதாயினும், எதிர்கட்சித் தலைவருக்கெதிராக போராட்டம் நடத்தியவர்கள் ரணிலின் கருத்தைத் கண்டு கொள்ளாதது ஏன் என்ற கேள்வியும் உண்டு.

ஆக, இது வெறும் தேர்தலை மையப்படுத்திய கருத்தென்பதை தெளிவுபடுத்தி நிற்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பின் பொது வேட்பாளரை நிறுத்தி எமது பலத்தை சர்வதேசத்திற்கு காட்டுவோம் என்ற செயற்றிட்டங்கள் படுவேகமாக நகரும் நேரத்தில் எம்.ஏ சுமந்திரனுடனான ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்பு பல செய்திகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

தொடர்ந்தும் நாம் பெரும்பாண்மை ஆட்சியாளர்களின் வார்த்தைகளை நம்பி ஏமாறப் போகிறோமா? அல்லது அவர்களிடம் எமக்கான தீர்வை எழுத்துமூலம் பெற்று அதனூடாக அவரை ஆதரிக்கப் போகிறோமா? அல்லது தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி அவரை ஆதரித்து அவருக்கு எமது ஒட்டுமொத்த வாக்குகளையும் இடப்போகிறாமா? இவற்றை வெறும் 49 நாட்களில் முடிவு செய்ய வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள

# தொழில்சார் மனஅழுத்தம்



மனஅழுத்தத்தின் ஒரு பிரிவாகத் தொழில்சார் மன அழுத்தம் காணப்படுகின்றது. அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் அலுவலகப்பணி யில் இருப்பவர்களில் பத்திற்கு ஒன்பதுபேர் ஏதேனும் ஒருவகை மன அழுத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

தொழினுட்பப் பிரகாரம் பெருக்கெடுத் தோடுகின்ற இன் றைய காலகட்டத்தில் ஒவ் வொருவரினதும் தேவைகள் பல்கிப் பெருகுகின்றன. இத் தேவைகளுடன் இணைந்த தாக சவால்களும், அச்சுறுத் தல்களும் பெருக்கற்திறனில் அதிகரித்துச் செல்கின்றன. இச்சவால்கள் அல்லது அச் சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கான அல்லது அவற்றை வெற்றி கொள்வதற்கான ஆற்றல்கள் தன்னிடம் இல்லை என ஒருவர் உணரும் பட்சத்தில் அவர் மனஅழுத்த நிலைக்குள்ளாகின்றார் எனப் பொதுவாகக் குறிப்பிடலாம். தொழில் சார் மனஅழுத்தம் என்பது "ஊழியர்களிற்கு வேலை தொடர்பாக அழுத்தங்கள் வழங்கப்படும் போது அவர்கள் தங்கள் அறிவு மற்றும் திறன்களைப் பயன் படுத்தி அவ்வேலை சார்ந்த எதிர்பார்ப்புக்களையும், நிர்ப்பந்தங்களையும் செய்ய முடியாமல் போவதுடன் அது அவர்களது தைரியத்திற்கும், சமாளிக்கும் திறனிற்கும் சவாலாக அமையுமாயின் அதுவே தொழில்சார் மன அழுத்தம்" ஆகும்.

தொழில்சார் நெருக்கீட்டினால் ஏற்படும் பாதிப்புக்களைப் பின்வருமாறு இனங்காணலாம். உடல் ரீதியான விளை வுகளாக உடல் சோர்வடைதல், இதயத்துடிப்பு அதிகரித்தல், சுவாச வேகம் அதிகரித்தல், மூட்டுவலி காணப்படுதல், நெஞ்சுவலி காணப்படுதல், தோல் சம்பந்தமான நோய்கள் காணப்படுதல், தலையிடி,களைப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். உள ரீதியான விளைவுகளாக பயம், குழப்பம், சோர்வு, இலகுவில் ஒதுங்குதல், நிம்மதியற்ற தன்மை, கவலை, சலிப்புத்தன்மை, கோபம், நிச்சயமற்ற நிலை, அதிகரித்த பதற்றம், கவனமின்மை, தற்கொலை முயற்சி, மெய்ப்பாடு நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோய், மனதை ஒருமுகப்படுத்த முடியாமை போன்ற வற்றைக் குறிப்பிடலாம். சமூக விளைவுகளாக வேலை யிழப்புக்கள், தொழில் நிறுவன முடக்கம், உற்பத்தி யின்மை, பணவீக்கம், பொருளாதார தேக்கநிலை, விலைவாசி உயர்வு, சமூக விரோத நடத்தைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அறிகை சார்ந்த விளைவுகளாக மறதி, ஞாபக சக்தி குறைவடைதல், எதிர்கால எண்ணம் அற்றுப்போதல், கருத்தூன்ற முடியாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். நடத்தை ரீதியான விளைவுகளாக பசியின்மை, நித்திரை யின்மை, தனிமையை நாடுதல், அடிக்கடி சிறுநீர்கழித்தல், பொய் கூறுதல், ஆர்வமின்மை, போதைப்பொருள் பாவனை, அளவு மீறிய தொழிற்பாடு, நடத்தைப் பின்ன டைவு போன்றவற்றைக் குறிப்பிடலாம். தொழில் நிறுவனத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களாக பொருட்சேதம், விபத்துக்கள், தொழிலாளரின் பகிஸ்கரிப்பு, தொழிலாளர் வரவு குறைதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தொழில்நுட்பங்களுக்கு ஓய்வு கொடுங்கள். 24 மணி நேரமும் உங்கள் பணியினை எளிமையாக்கும் அதே தொழில்நுட்பம் உங்களிற்கு மனஅழுத்தத்தினை உண்டாக் கும். உங்கள் தொலைபேசிகளும், கைபேசிகளும் உங்கள் வசதிக்காக தான்.

அது ஒலிக்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் எடுத்துப் பேச வேண்டும் என்பதில்லை. முக்கியமான வேலைகளில் நடுவே இருக்கும் போது தொலை பேசி மணி அடித்தாலும் எடுத்துப் பேசாதீர்கள். அன்றாடம் எதிர்நோக்கும் உங்கள் பிரச்சினைகளை ஒரு தாளில் பட்டியலிடுங்கள். இவ்வாறு பட்டியலிடும் போது உங்கள் மனப்பாரம் கணிசமாக குறையும். அதற்கான தீர்வு இதன் மூலம் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. இயலாத காரியங் களுக்கு "இல்லை" என்று சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள். பிரயாணத்தின் போது ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள். காத்திருக்கும் நேரத்தில் வாசியுங்கள். அது உங்களுக்குள் புதிய திறப்பினைக் கொண்டுவரும்.

விடுமுறைக் காலத்தில் உறவினர் வீடுகளைத் தரிசிப்பது பெற்றோர் இருவருடன் மட்டும் உறவாடும் பிள்ளைக்கு உற வினருடனும் உறவாடும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. சக வயதுக்குழந்தைகளுடன் பழகுவது, பெரியவருடன் பேசு வது, சமூகமான உறவு பற்றித் தெரிவது என எல்லாம் விருத்தி யடைகின்றது. இதேபோல் நண்பர்கள், உறவி னர்கள் கூடிச் சுற்றுலா செல்வதும், பிள்ளைகளிடம் ஆர்வம், சந்தோசம் ஏற்படுத்துவதுடன் புதுப்புது அனுபவம் பெற வாய்ப்பாக அமையும்.தன்னிலை உணரும் திறன்பெற்று (Self awarenss) செயற்பட வேண்டும்.

மன அழுத்தத்தினைக் கையாள்வதற்கு எளியமுறை களைப் பின்பற்றலாம். தியானத்தைக் கடைப்பிடித்தல், முன் னாயத்தமாக நடத்தல், நேரத்தைத் திட்ட மிடுதல், உளநெருக்கீட்டைச் சவாலாக மாற்றுதல், உள நெருக் கீட்டை ஆரோக்கியமாகக் கையாள்வோரிடம் கேட்டுக்கற்றுக் கொள்ளல், மனதுக்கு ரம்மியமான இசையைக் கேட்டல், நண்பர்களுடன் பகிர்தல். உங்களின் ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியில் நெருக்கீடு இடைநிற்க அனுமதி யளிக்கா தீர்கள். தொடர்ந்து அதுபோன்ற பிரச்சினைக்கு முகம் கொடுப்பின் அருகில் உள்ள உளவளத்துணையாளரை அணுகலாம். உதவிகோருதல் பலவீனத்தின் அடையாளம் அல்ல. உங்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதே உண்மையான பலம் ஆகும்.

அந்தவகையில் தொழில் உலகைப் பொறுத்த வரையில் தொழி லாளர்களிடையே அவர்கள் செய்கின்ற பணியின் நிமிர்த்தம் மனஅழுத்தம் ஏற்படுகின்றது. தற்காலத்தில் ஊழியர்களுக் கிடையில் மனஅழுத்தம் அதிகரிக்கின்ற மைக்கு பல்வேறான காரணங்கள் செல்வாக்குச் செலுத்து கின்றது. ஊழியர்களுக்கு மனஅழுத்தம் பல வழிகளில் ஏற்படும் போது அவர்கள் உடல், உள, சமூக, நடத்தை, அறிகை ரீதியாக பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளா கின்றனர்.மேற்குறிப்பிட்ட தொழில்சார் மன அழுத்தத் திலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகளினை பின்பற்று வதன்மூலம் ஆரோக்கியத்தோடு வாழலாம்.

பஞ்சாட்சரம் கங்காதரன்,
ஆசிரியர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி.

# கடவுள் எனக்கு அளித்த பரிசு

இந்திய கிரிக்கெட் அணி 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்க இலங் கைக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டு இருக்கிறது. இத் தொடரில் 3:0 என தொடரை இழந்திருக்கிறது **இலங்கை அணி.**

சூர்யகுமார் தலைமையி லான ரி-20 அணியும், ரோஹித் சர்மா தலைமை யிலான ஒரு நாள் அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போல், சரித் அசலங்க தலை மையிலான இலங்கைரி-20 அணியும் அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த அணியில் வேகப் பந்து வீச்சாளரானா மதிஷா பதிரனா இடம் பெற்றி ருக்கிறார். தேடரில் ஓரளவு சிறப்பாக பந்துது வீசியிருந்தார் அவர்.

2022 ஆம் ஆண்டில் அறி முகமான முதல் ஐபிஎல் தொட ரிலேயே சிஎஸ்கே அணிக்காக 19 விக்கெட்டுகளை எடுத்து அசத்தியிருந்தார்.

இந்நிலையில் பேட்டி ஒன் றில் பேசிய பதிரனா, "என் 19 வயது வரையிலும் எந்த இல ங்கை கிரிக்கெட் அணியிலும் நான்இடம்பெறவில்லை. ஆனால், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி க்கு தேர்வானதைத் தொடர்ந்து, இலங்கையின் பிரதான அணி க்குத் தேர்வாகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

சென்னை அணிக்காக நான் விளையாடியது கடவுள் என க்கு அளித்த பரிசு. நான் சிஎஸ் கேக்காக விளையாடும் வரை பலருக்கு என்னை தெரியாது. ஓய்வறையில் டோனியிடம் விடயங்களைப் பகிர்ந்து கொண் டது என்னைப் போன்ற இளம் வீரர்களுக்கு மிகவும் ஸ்பெ ஷலான ஒன்று" என்று கூறியி ருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் கணிப்பால் அடுத்த ஜனாதிபதி யார் வியாசரே?

**மலர்** **யாழ்ப்பாணம்**

**அன்பே கடவுள் என உணரும் மனித குலம் ஏன் போர் அரக்கனை ஏவி விடுகிறது?**

அன்பே இறைவன் என்ற நிலை மாறியதால் வந்த வினையே இது. கடவுளை மனிதன் மறக்கும் போது கடவுளும் அதற்கு தக்க பதில் அடி வழங்கியே தீருவார். இன்றைய உலகில் நடை பெறும் பிரளயம் அனைத்திற்கும் இதுவே காரணம் என லாம்.

ஆயினும் அற்ப மனிதன் இதைப் புரிந்து கொள்கின்றானா என்றால் இல்லை என்பதே முடிவு. கடவுளை மறந்து மனச் சாட்சியை மறந்து பணத்தின் மீது மோகம் கொள்ளும் மனித குலத்தை அழிப்பதை விட இறைவனால் வேறு எதை செய்து விட முடியும்.

**விஜயதரன்** **உரும்பிராய்**

**உங்கள் கணிப்பில் அடுத்த ஜனாதிபதி யார் வியாசரே?**

ஆக்கப் பொறுத்த நீங்கள் ஆறாப் பொறுத்திருங்களேன். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்றும் வெறும் 49 நாட்களே இருக்கின்றன.

அதன் பின் யார் வெல்லப் போகிறார். எப்படியான ஆட்சியை மேற்கொள்ளப் போகின்றார்கள் என்று புரிந்து விடும்.

அதற்கு முன்பு எனது வாயைக் கிழரி விட நான் ஏதாவது கூறி விட அது ஏதும் பிரகண்டத்தை ஏற்படுத்தி விட...

ஏன் வீண வம்பை விலை கொடுத்து வாங்குவான்.

**மகாலட்சுமி** **கொக்குவில்**

**தோணி அசையும் துறைமுகம் அசையாது என்பது பற்றி?**

வாழ்வில் பல இன்ப துன்பங்கள் வந்து செல்லும் ஆனால் அதை எதிர் கொள்ளும் மனிதன் ஒருவனே.

மனித வாழ்வில் வரும் சொந்தங்கள், சுகங்கள், பணம், புகழ், இன்பம், துன்பம் இவை அனைத்தும் தோணி போன்றது.

சந்தர்ப்பத்திற்கு ஏற்ப எம்முடன் இருக்கும் நிலையற்ற ஒன்று. ஆனால் இவற்றை எல்லாம் எதிர்கொள்ளும் மனிதன் மட்டும் அசையாது துறைமுகமாய் இருப்பான்.

இன்றைய தற்கொலை அதிகரிப்புக்கு, பிரச்சினைகளை எதிர்கொள்ள பழகாமையே மிக முக்கிய காரணியாக இருக்கிறது.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**பாலமயூரன்** **பருத்தித்துறை**

**ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிய ஈழத்தமிழன் தர்சன் பற்றி?**

உலக வரலாற்றில் ஈழத்தமிழனத்திற்கு கிடைத்த பெருமை இது.

நிச்சயமாக இது உலக வாலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயம்.

ஈழ தமிழரின் பெருமை உலகளவில் உயர்ந்து நிற்கிறது என நினைக்கும் போது தமிழினம் பட்ட துன்ப, துயரங்கள், இழப்புக்கள் அனைத்தும் கண்முன் ஆடி மறைகின்றன. இவ்வாறான வெற்றிகளே எமது வலிகளை ஆற்றும் என்பது மட்டும் உண்மை.


**ஈஸ்வரன்** **உரும்பிராய்**

**அன்பின் வியாசர் அவர்களே எமது தமிழ் தத்துவவாதிகள் ஏன் தமிழ் மக்களின் பொருளாதாரம் பற்றி சிந்திக்கவில்லை?**

அவர்களுக்கு தமிழ் மக்கள் மீது அக்கறை இருக்கிறது என நீங்கள் நினைத்தால் அதற்கு அவர்கள் என்ன செய்வது சொல்லுங்கள்.

தமிழ் மக்கள் என்பவர்கள் அவர்களை பொறுத்தவரை கறிவேப்பிலை அல்லது ஊறுகாய். தமது தேவை முடிந்ததும் தூக்கி எறிவார்கள் அல்லது தமக்குத் தேவை ஏற்படும் போது தொட்டுக் கொள்வார்கள்.

இதைப்புரியாத முட்டாள்களாகிய தமிழ் இனத்திற்கு எதைச் சொல்லிப் புரியவைக்க முடியும் சொல்லுங்கள்.



ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிய ஈழத்தமிழன் தர்சன் பற்றி?

**கனேஸ்** **பருத்தித்துறை**

**சிரிப்பது கட்டாயம். யப்பானின் புதிய சட்டம் பற்றி?**

மனைவி : என்னங்க மிதவாதம் என்றால் என்ன?

கணவன் : சண்டை வரும் போது நீ என்னைத் திட்டுவது

மனைவி : பயங்கரவாதம் என்றால் என்ன?

கணவன்: சண்டையில் நீ என்னை அடிப்பது

மனைவி: அப்போ அகிம்சை என்றால்?

கணவன்: இதையெல்லாம் சமாளிச்சிட்டு நான் அமைதியா இருப்பது.

சிரிப்பதற்கு மட்டும்

**மதுவன்** **மீசாலை**

**ரணிலுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவாமே வியாசரே?**

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் மிகச் சிறந்த அரசியல்வாதி என்பதை இவ் விடயத்தில் மட்டுமல்ல இன்னும் பல விடயங்களில் நிரூபித்துவிட்டார்.

அதில் மிக முக்கியமானதில் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி, கட்டமைப்பு மிக்க அந்த அமைப்பை உடைத்தெறிந்தவர்.

சஜித், அநுர என வேறு திசையில் சென்ற ஜனாதிபதி கதிரையை மிகச் சாமர்த்தியமாக தனதாக்கியவர்.

இப்போது மகிந்த தரப்பு மொட்டில் கேட்கும்படி கோரிக்கை விடுப்பதற்குள் சுயேட்சையில் கட்டுப்பணம் செலுத்தி மொட்டுக் கட்சியை தன்வசம் திருப்பியிருக்கிறார்.

இதன் விளைவு ரணில் தன் அரசியலில் எதிர் சகாக்களின் கட்சியில் தேர்தல் செய்ய விரும்பவில்லை என்ற தோற்றப்பாட்டைக் காட்டிவிட்டார்.

**டனுசாந்ராசா** **திருநெல்வேலி**

**பிரபாகரனால் பெற்றுத் தர முடியாத தமிழீழத்தை வேறு யாராலும் பெற்றுத்தர முடியாது என்கிறாரே பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன்?**

ஆனால் தேர்தல் காலம் வந்தால் இழந்த தமிழினத்தின் சுதந்திரத்தை மீட்டெடுக்க. பறிபோன எமது மண்ணை மீட்டெடுக்க.

சுரண்டப்படும் எமது வளங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள.

தமிழினத்தின் முதுகுகளில் சுமத்தியிருக்கும் சுமையை இறக்கி வைக்க. உண்மை, நேர்மை, தூரநோக்குப் பார்வை கொண்ட எமக்கு வாக்களியுங்கள் என்று வாய் கிழியக் கத்துவது ஏன்?

இனியொரு தலைவன் தமிழினத்துக்குக் கிடைக்கப் போவதில்லை. அப்படிக் கிடைப்பதாக இருந்தால் அது தமிழினத்தின் அடுத்த ஜென்மமாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

**பண்டிதர்:-** கடந்த ஆலடி மாநாட்டில் சிவாச்சாரியர்களின் பூசைவழிபாட்டில் உள்ள குறைபாடுகளை இந்த இடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இது தொடர்பில் கோயில் நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டவர்களும் ஏனையவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சிவாச்சாரியர்களில் ஒரு தரப்பினர் பூசை வழிபாடுகளை நேர்த்தியாகச் செய்வதில்லை என்றும் இதனால் ஆலயத்திற்கு அடியார்கள் செல்வது மிகவும் குறைந்து போகும் என்றும் தெரிவித்துள்ளனர்.

**விதானையார்:-** உண்மை தான். இப்பவே கோயில்களில சனங்கள் இல்லை.

அண்மையில கல்வியங்காட்டில உள்ள ஒரு கோயிலில திருவிழா நடந்தது. அதில தம்ப பூசை நடந்த போது மூன்று பேர் மட்டும் தான் அங்க இருந்தினம்.

அதில ஒருவர் குருக்கள். மற்றவர் உதவி ஐயா. மூன்றாவது ஆள் தவில் வாசிப்பவர்.

வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுகின்ற மகோற்சவத்தில தம்ப பூசைக்கு ஒருத்தரும் இல்லை எனும் போது, இந்தத் திருவிழாக்களைச் செய்வதில ஏதேனும் அர்த்தம் இருக்குதோ!

இவ்வாறு விதானையார் கேட்க, ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** இப்ப தமிழர் தாயகம் எங்கும் ஒரே திருவிழாத் தான். அதிலும் கிராமியத் தெய்வங்களுக்கும் பெருங்கோயில் கட்டி குட முழுக்கு நடத்திவிட, அங்கயும் மகோற்சவம் தொடங்கி தேர், தீர்த்தம் நடக்கலாயிற்று.

உண்மையில எங்கட தமிழர் பிரதேசத்தில நடக்கிற மகோற்சவங்களையும் அதற்கான செலவுகளையும் பார்க்கும் போது, ஏதோ வெளிநாட்டு நிதி உதவி இருக்கிறதால, அடியவர்கள் இல்லாவிட்டாலும் திருவிழா நடந்தாகிறது.

ஆனால் வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் போகிற போது தான், கோயில் திருவிழாக்கள் எப்படியாகும் என்பது தெரியவரும்.

**சிறாப்பர்:-** சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஆலடியிலும் அரசடியிலும் இருந்த கடவுள்களுக்கு கோயில் கட்டி குடமுழுக்குச் செய்து போட்டம்.

முன்பெல்லாம் அந்த ஊர் மக்கள் சங்கு ஊதி சேமக்கலம் அடித்து காலையும் மாலையும் பூசை செய்தினம்.

வருடத்தில ஒரு நாள் பொங்கல். மிகவும் பக்தி பூர்வமாக அந்த வழிபாடு நடந்தது.

ஊர் ஆக்கள் வெளிநாடு போனதும் நான் மூலஸ்தானம் கட்டுறன் அவர் மகாமண்டபம். இவர் கோபுரம் இப்படியே கட்டிடத்தை எழுப்பி குடமுழுக்குச் செய்து கோயிலைப் பூட்டி வைக்க, நாள் தோறும் கும்பிட்ட சனங்கள் எப்ப கோயில் திறக்கப்படும், இண்டைக்கு ஐயா! வருவாரோ! எண்டு கேட்டுக் களைச்சுப் போக, பத்துப் பன்னிரெண்டு கோயில்களில எக்ஸ்பிரஸ் வேகத்தில பூசை முடித்துவிட்டு 100 கிலோ மீற்றர் வேகத்தில மோட்டார் சைக்கிளில ஐயா ஓடி வந்தது கூடத் தெரியாமல் போனதாக நிலைமை முடிந்து போயிற்றுது.

**மூப்பர்:-** இதை நீங்கள் சொல்லுறியள். வெளிநாடுகளுக்குப் போன நம்மட ஆட்கள் அங்கும் கோயில் கட்டி குட முழுக்குச் செய்யினம் தானே!

**சாத்திரியார்:-** அது தான் வெளிநாட்டில கட்டின கோயில்களுக்கு எங்கட யாழ்ப்பாணத்தில இருந்து ஐயர்மாரைக் கூப்பிடுகினம். போதாக்குறைக்கு இஞ்ச இருக்கிற தவில், நாதஸ்வர வித்துவான்களையும் அழைத்து டொலர் கணக்கில அள்ளிக் கொடுக்கினம். பிறகென்ன அங்க போய் வந்த குருக்கள் மாருக்கும் தவில் வித்துவான்களுக்கும் இஞ்ச பூசை செய்யவும் கச்சேரி நடத்தவும் விருப்பமில்லையாம்.

**கங்காணி:-** இதென்ன நாசமறுப்பு, ஏன் சாத்திரியார் அப்படியான நிலை ஏற்பட்டது.


**சாத்திரியார்:-** அங்க டொலரில அள்ளிக் கொடுப்பினம், இஞ்ச என்ன செய்யிறது.

**பண்டிதர்:-** இஞ்ச இருக்கிற சிவாச்சாரியர்களை வெளிநாடுகளுக்குக் கூப்பிடுகிறதால இஞ்ச சிவாச்சாரியர்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதேபோல இஞ்ச கோயில் திருவிழாவுக்கு மேளம் பிடிப்பதாக இருந்தால் குறைந்தது மூன்று இலட்சம் ரூபாய் தேவை.

இந்த நிலையில என்னெண்டு திருவிழாவை நடத்தி முடிக்கிறது.

**வாத்தியார்:-** என்னைப் பொறுத்தவரை, எங்கட சகல ஆலயத் திருவிழாக்களுக்கும் எங்கட ஆட்கள் செலவிடுகின்ற தொகையைக் கணக்கிட்டால் கோடிக் கணக்கில வரும்.



குருக்களும் தவில் நாதஸ்வரக்காரரும் வெளிநாடு போவதால இஞ்ச பெரும்பாடு

ஏனைய சமயங்களுக்கு இந்தச் செலவுகள் எதுவும் கிடையாது. அந்த வகையில, இப்ப தவில் நாதஸ்வரத்துக்கான வேதனம் கண்ட பாட்டில உயர்ந்துள்ளதால ஆலயங்கள் மாற்று நடவடிக்கை எடுக்க வேணும்.

**விதானையார்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** ஒவ்வொரு கோயில்களும் அந்தந்த இடங்களில இருக்கிற மாணவர்களுக்கு மிருதங்கம், ஆர்மோனியம், தவில், நாதஸ்வரம் ஆகிய இசைக் கருவிகளை இசைக்கக் கற்றுக் கொடுக்க வேணும்.

சுவாமி வீதி உலா வரும் போது, ஒரு நாள் மிருதங்க வாத்தியம், மறு நாள் வயலின் இசை, இன்னொரு நாள் சங்கு சேமக்கலம், ஒருநாள் தவில் நாதஸ்வரம் என இசை முழங்க சுவாமி வீதி உலா வரலாம்.

இதில இருக்கிற சிறப்பு என்னவென்றால்,எல்லா வாத்திய இசைகளும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்படும். அதே நேரம் அந்த ஊர்ப் பிள்ளைகள் தான் இந்த வாத்தியங்களை இசைப்பதால அவர்களும் சிறந்த கலைஞர்களாக உருவாக முடியும்.

சுருங்கச் சொன்னால் சீ தமிழ் ரி.வி நடத்துகின்ற சரிகமப... நிகழ்ச்சி போல, ஆற்றல் மிகுந்த கலைஞர்களை இனங்காணவும் அவர்களை வெளிப்படுத்தவும் இது உதவும்.

இதைத் தான் எங்கட சைவ ஆலயங்கள் உடனடியாக அமுல்படுத்த வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** வாத்தியார் நீங்கள் இதைச் சொல்ல, எங்கட மங்கள வாத்தியக்காரர்கள் உங்களில கோபப்படப் போகினமல்லோ.

**வாத்தியார்:-**

இஞ்சே சிறாப்பர்; தவில், நாதஸ்வரம் எண்டால் அதற்கும் ஒரு கட்டண எல்லை இருக்க வேணும். இதைவிட்டிட்டு மூன்று இலட்சம் ரூபாய் தந்தால் தான் தேர்த்திருவிழாவுக்கு மங்கள வாத்தியம் வாசிப்பம் எண்டால் அதையேன். தேர்த்திருவிழா நடக்கும் போது ஒலி பெருக்கியில நல்ல மேளக்கச்சேரியைப் போடலாம் தானே.

**விதானையார்:-** மங்கள இசைக்கு வாத்தியார் சொன்ன மாற்றுத் திட்டம் போல, சிவாச்சாரியர்களின்ர தட்டுப்பாட்டுக்கும் ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேணும்.

**வாத்தியார்:-** உண்மை தான், இது பற்றி நாங்கள் அடுத்த ஆலடி மாநாட்டில ஒரு தீர்க்கமான முடிவொன்றை எடுப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஏற்றுக் கொள்வது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை

கீழைத்தேசத்திலுள்ள கோட்டைகள் யாவற்றிலும் யாழ்ப்பாணக் கோட்டை மிகப் பலமானதும் பாதுகாப்பானதும் என அனைத்து கட்டடங்களை விற்பன்னர்களாலும் விதந்துரைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டை அமைக்கப்பட்ட கால கட்டத்தில் இந்துசமுத்திர நாடுகள் பலவற்றிலும் பலமான கோட்டைகள் கட்டப் பட்டிருந்தன. ஆனால் அவை எதுவும் யாழ்ப்பாணக் கோட்டையில் முழுமைக்கும் நிறைவுக் கும் தொழில்நுட்பத்திறனுக்கும் நிகராகாது என பலரும் போற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணக்குடா நாட்டின் தென் விளிம்பில் யாழ்பாணக் கடனீரேரியின் கரையில் கம்பீரமாக யாழ்ப்பாணக் கோட்டை அமைந்திருந்தது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையை மீளப் புதிப்பித்துக் கட்டியபோது ஐங்கோணவடியில் வடிவமைத்தனர். முதலில் உள் கோட்டையின் ஐங்கோண வடிவம் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது.

இதனை அவர்கள் 1680 ஆம் ஆண்டு கட்டி முடித்தனர் என்பது கோட்டை வாயிற் கதவில் பொறிக்கப்பட்ட ஆண்டு குறிப்பிடுகின்றது. கோட்டையின் வெளியமைப் புச் சுற்றுக்கட்டமைப்புகள் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடக்கப்பட்டு 1792 ஆம் ஆண்டு நிறைவுற்றது என்பது கோட்டையின் வாசல் வளைவில் பொறிக்கப்பட்டிருக்கும் ஆண்டு குறித்து நிற்கின்றது. இதில் அவதானிக்க வேண்டிய பரிதாபம் யாதெனில், ஒல்லாந்தர் இந்த ஐங்கோணக் கோட்டையை 1792 இல் அதாவது பிரித்தானியரிடம் கோட்டையைப் பறிகொடுப்பதற்கு மூன்றாண்டுளுக்கு முன்பே பூரணமானது என்பதாகும். இந்த மாபெரும் கோட்டையை ஒல்லாந்தர் 1795 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி பிரித்தானியரிடமிழந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டை ஐந்து கொத்தளங்களைக்


22 செங்கை ஆழியான்

(Bastians) கொண்டிருந்தது. சுடனீரேரிப் பக்கமாக இரண்டு கொத்தளங்களையும், நிலப் புறமாக மூன்று கொத்தளங்களையும் கொண்டிருந்தது. இந்த ஐந்து கொத்தளங்களும் தெளிவாகப் பெயரிடப்பட்டிருந்தன. கோட்டையின் வடபுறக் கொத்தளம் உற்றெச் (UTRECHT) என அழைக்கப்பட்டது. வட கிழக்குப் புறக் கொத்தளம் ஹெல்டர்லாந்து என்றும் தென் கிழக்குப் புறக் கொத்தளம் ஒல்லாந்து (HOLAND) என்றும்,

தென் மேற்குப் புறக் கொத்தளம் சீலாந்து (ZEE LAND) என்றும். வடமேற்குப் புறக் சொத்தளம் பிறிஸ்லாந்து (FRIESLAND) என்றும் அழைக்கப்பட்டன.

இந்த ஐந்து கொத்தளங்களும் நெடும் மதில் களினால் இணைக்கப்பட்டிருந்தன.

(தொடரும்...)

---




"ஆனால் அவள்..." "அவள் வரலாற்றுச் சதரங்கத்தில் ஒரு காய். ஸ்ரீவிஜயவரலாற்றின் பெருமைக்கு அவள் அன்பு இடையூறாக இருந்தால் அதையும் உடைக்க வேண்டும். பெரிய வல்லரசுகளின் மோதலில் பல உயிர்களின் நாசம், பலர் வாழ்வின் நாசம், நகரங்களின் நாசம் எல்லாம் ஏற்படுவது இயற்கை."

"அப்படியானால் மஞ்சளழகியை" என்று இழுத்தான் இடும்பன். "இப்படி அருகில், வா" என்று இடும்பனை அழைத்த பலவர்மன் அவன் காதுக்கருகில் கிசுகிசுவென ஏதோ சொன்னான், அதைக் கேட்டதும் தணலை மிதித்து விட்டவன் போல் அதிர்ச்சியடைந்த இடும்பன், "இதை எப்போது துவங்க வேண்டும்!"

என்று வினவினான் குரல் நடுங்க. "இந்த அமாவாசை போக அடுத்த அமாவாசைக்கு ஒரு வாரம் முன்னதாக," என்று வந்தது பலவர்மன் பதில். "ஏன் அத்தனை நாட்கள்?" 'கோட்டையிலுள்ள மக்கள் சற்று அசந்து தூங்க அத்தனை நாளாகும்."

'இதுதான் அன்பின் வழியா!" என்று கூறி வெறுப்புச் சிரிப்புச் சிரித்தான் இடும்பன். ஆம், ஒருவிதத்தில் அன்பின் வழிதான் இது. எந்த வழியாயிருந்தாலும் உன்னையும் என்னையும் காப்பாற்றிக் கொள்ளச் சிறந்த வழி இதுதான்." என்று குறிப்பிட்டான் பலவர்மன். இடும்பன் பலவர்மனை ஏறெடுத்து நோக்கினான். பலவர்மா! சுயநலத்துக்காக எத்தனையோ பேரைக் கொன்றிருக்கிறாய் ஆனால் மகளின் மனத்தையும் வாழ்வையும் உடைக்க முனைவாய் என்று நான் இன்று வரை எண்ணவில்லை. அதற்கும் துணிந்துவிட்டாய். சரி

# கடல் புறா

உன் இஷ்டப்படி செய்கிறேன். ஆனால் உன் வளர்ப்புப் பெண்ணின் பெற்றோருக்கு நீ பதில் சொல்ல வேண்டாமா?" என்று கேட்டான்.

"தாய் இல்லை அவளுக்கு. தந்தைதான் இருக்கிறார். இவளை மகளென்று சொன்னாலே அவர் தலைக்குத் தீம்பு வரும். ஆகவே அவர் இவளைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்." "அத்தனை சிக்கலா அவள் பிறப்பு ரகசியம்?" அதைப்பற்றிய தகவல் ஏதாவது...?"

"யாருக்கும் தெரிய வராது. அந்தத் தகவல் என் சொந்தப் பெட்டியில் இருக்கிறது. பெட்டியின் சாவி இதோ இருக்கிறது," என்று தன் மார்பில் ஊஞ்சலாடிய சங்கிலியிலிருந்த ஒரு சாவியைக் காட்டினான் பலவர்மன். அதனால் திருப்தியடைந்த இடும்பன் உள்ளூர பலவர்மனின் கொடுமையை நினைத்து வெறுத்துக் கொண்டாலும் அவன் யோசனைப்

## அன்பின் வழி

படி நடப்பதாக வாக்குறுதி கொடுத்துப் பின்புற வாயில் வழியாக வெளியேறினான். அவன் வெளியேறியதைப் பார்த்துக்கொண்டு நின்ற பலவர்மன், "அன்பின் வழி! ஆம், அதுதான் சிறந்த வழி.

அன்புக்கு அழிக்கும் சக்தியும் உண்டு. சீக்கிரமே அதைப் புரிந்துகொள்வாய் இளையபல்லவா!" என்று தனக்குள் சொல்லிக் குரூரமாகச் சிரித்துக் கொண்டும் மிகுந்த மனத் திருப்தியுடனும் திரும்பவும் மாளிகைக்குள் சென்றான் அந்த வஞ்சகன்.

### குடிப் பழக்கம்

இடும்பனிடம் தன் வஞ்சகத் திட்டத்தைக் கூறிவிட்டு அதை நிறைவேற்றும் காலத்தையும் குறிப்பிட்டுவிட்டு மாளிகைக்குள் புகுந்த அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் அன்றிரவில் மிகுந்த நிம்மதியுடன் உறங்கினான்.

அந்த நிம்மதி மறுநாளும் அதைத் தொடர்ந்த மற்ற நாட்களிலும் மிக வெளிப்படையாகத் தெரிந்தது.

ஏதோ பெரும் மனச்சுமை இறங்கியவன் போல் அதி நிம்மதியுடனும் சந்துஷ்டியுடனும் மாளிகையில் மட்டுமல்லாமல் நகரத்திலும் கடற்கரையிலும்கூட தினப்படி உலாவ முற்பட்ட பலவர்மன், போர்ப் பயிற்சி பெற்ற மக்களை உற்சாகப்படுத்தியும், இளையபல்லவன் மரக்கலத்தைச் செப்பனிட்டு வந்த அக்ஷய முனைத் தொழிலாளர்களைப் பாராட்டியும் தன் சந்துஷ்டியை வெளிப்படையாகவும் காட்டிக் கொண்டான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடாய்

கானல் நீரில் பிடித்த மீனை
கருவாடாக்கும் என் முயற்சி
நாணல் புல்லிற்கும் வளைவில்
மீளமைவுக்குணகம் தான் கடைசி
கர்ஜிக்க மறந்த சிங்கமும்
கல்லடிபட்ட தெருநாய்தான்
சீறுவதற்கு புரிந்த பூனையும்
சில காலம் ராஜா தான்
"இப்படித்தான்" என முடிவெடுக்கையில்-எம்
வாழ்க்கை முடிந்திருக்கும்
எப்படித்தான் முயன்று பார்த்தாலும்-அதில்
இறக்கங்கள் சேர்ந்திருக்கும்
அழுது கொண்டே இருந்து விடாதே-உன்
கண்ணீரில் கால் கழுவ கூட்டங்கள் குவிந்து விடும்
விழுது கொண்ட "ஆல்" என்று எழுந்து விட்டால்-உன்
நிழலில் உறங்க அக் கூட்டங்கள் தவித்திருக்கும்
ஒரு நாள் மாறும் என்ற அந்த திருநாள் வந்து சேரும்
பல நாள் தவம் என்றால் அது ஒருநாள் வரமாகும்

கவிக்காதலன் சிவசுபத்திரன்.




வல்லவன் பம்பரம் வரம்பிலும் ஆடுமென்பரே
வல்லமையாய் உழைப்பவன் கோடி சேருமே
கொண்ட கொள்கையில்
உறுதிகானில் வெற்றி நிசமே
வெற்றி பெற்றவன் வாழ்வில்
வல்லமையில் சாயல் தெரியுமே

வல்லமையுள்ள தெய்வத்திடம்
நம்பிக்கையுடன் வேண்டுதல்
நல்ல விடயங்கள் நடந்தேறிடுமே
வல்லமையுடன் கல்வியை தொடர்ந்தால்
வாழ்வின் உயர்வு தானே
சோம்பேறியாக இருந்திட்டால் சோறு கிடைக்குமா

காதல் கொண்ட பெண்ணை கரம் பிடித்திடல்
தடைகள் தாண்டிய வல்லமை வேண்டுமே
பாதை தடுமாறிடின் வாய் வல்லமை வேண்டுமே
வியாபாரியின் வல்லமை விற்பனையில் உயர்ச்சியே

வல்லமைமிக்க நாடுகள் விஞ்ஞான வளர்ச்சி காணுதே
அனுகுண்டு சோதனை அழிவுதான் கிட்டுமே
வல்லமையற்ற நாடுகள் பொருளாதார வீழ்ச்சியே
பொண்ணும் பொருளும் கிடைக்க வல்லமை வேண்டுமே

எஸ்.பி.தனா, தெல்லிப்பழை.

## ஆட்டுக்கறி அரசியல்

அரசியலும் ஆட்டுக்கறியும்
ஆயிரம்தான் சொன்னாலும்
யார் விடுவார்?

ருசி கண்ட கறியை
கொட்ட முடியுமா?
வாய்ப் பேச்சு அரசியலை
வெல்ல முடியுமா?

குளிர் என்பார்
கொழுப்பு என்பார்
கறி சாப்பிடும் போது
மக்கள் குறை
மகேசன் குறை என்பார்
ஓட்டுவாங்க வரும்போது

வெட்டினால் இரத்தம்,
கத்துவர் சத்தமாய்
மக்களை ஏமாற்ற

ஆளும் கட்சி,
எதிர் கட்சி
தோற்று விட்டால் புதுகட்சி

எஸ்.எ.கோகுலன்

## மௌனத்தின் தேடல்- 727



### தந்தை

தந்தையின் தோளிலிருந்து
வானை வியந்து பார்க்கும்
சின்னம் சிறுவனே!
நாளை நீ வானில் ஏறி
மேகம் தொட்டு பறப்பாய்
அந்த ஒரு சந்தோசம் போதும்
அவன் வாழ்நாள் முழுவதுக்கும்

ஹரின்

### தந்தையின் கனவு

தங்கள் கனவுகளை திணிக்காமல்
கற்பித்துக் கொடுப்பவர்கள்
தந்தைமார்கள்
தத்தித் திரிந்த வயதில்
ஏறத் தெரிந்த முதல் சிகரம்
தந்தைமார்களின்
தோள்களே

அல்லையூர், உ.கனிஸ்ரன்.

### வரம்

கழுத்தில் சால்வை போல்
மிடுக்குடன் கால் போட்டு
உயர உதவும் உச்சியும்
துயரத்தைத் தூரத் துரத்தும்
எண்ணங்கள் விமானத்தையும் தாண்டி
விண்வெளியையும் தொடும்
சுத்தமான காற்றுப் போன்று
சுதந்திரமும் சுகத்தைத் தரும்
புரிந்துணர்வுடன் கலந்த
இந்த இனிய வாழ்க்கை
இறைவன் கொடுத்த வரம்
இது எல்லோருக்கும் கிடைப்பதில்லை


க.நாகராசா, நுணாவில்.

### வானூர்தியா? கவனம்!

அன்று ஓர் நாள் வான்
நிலவைப் பிடித்துத் தரும்படி
கேட்ட மழலைக்கு
கண்ணாடியில் காட்டி
உணவூட்டினாள் புத்திசாலி அம்மா
இன்று வான் ஊர்தியை
தொட்டு விட ஏங்கும் சிறுவனை
காண்கிறோம்.
குழந்தாய்! வான் ஊர்தி
நெருங்கி வருகிறது அப்பாவும்
சிறுவனும் ரசிக்கிறீர்களா?
கடந்த கால நினைவுகள் தோன்றட்டும்
விலகிச் செல்லுங்கள்

அபி குலமாலிகா,
சித்தன்கேணி.

## மௌனத்தின் தேடல்- 728



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியூசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### பாசமுள்ள அப்பா

அன்பை அள்ளிச் சொறிந்திடும் அப்பா
அகிலம் போற்ற வாழ வைக்கும் அப்பா
தந்தையைப் போல் தரணியில் யாருளர்
தன் உடலையே வருத்தி எம்மை வாழ வைப்பார்
உலகைச் சுற்றும் விமானம் போல
உன்னதமான உறவுப்பாலம் எம் அப்பா
தோளோடு தோள் கொடுத்து எம்மை
தாங்கி பிடிக்கும் தந்தையின் உறவு
பார் போற்ற வாழ வைக்க காலமெல்லாம்
பாடுபட்டிடுவார் எம் தந்தை தோளோடு தோள்கொடுத்து எம்மை
தோளில் சுமந்து சொந்தம் கொண்டாடும் அழகைப் பாரீர்

ஆ. செல்வி, திருநாவலூர்.

### ஆவல்

கண்ணுக்கு எட்டினாலும் கைக்கெட்டா தூரத்தில்
விண்ணில் பறக்கும் விமானமதனை மண்ணில்
நின்று வியப்புடன் அண்ணாந்து பார்த்து ரசிக்கும்
தந்தையும் தனயனும் அவ் விமானமதில் தாங்களும்
ஏறி உலகைச் சுற்றி வரும் ஆவலில் தானோ

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: எங்கிருந்தோ வந்தாள்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வாநாதன்



ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல்

காதல் கிளிகள் பறந்த காலம்
கண்ணில் தெரியும் நெஞ்சம் உருகும்
காதல் கிளிகள் பறந்த காலம்
கண்ணில் தெரியும் நெஞ்சம் உருகும்
கண்ணீர் கலங்கி கண்ணில் இறங்கி
கண்ணீர் கலங்கி கண்ணில் இறங்கி
நெஞ்சில் விழுந்தால் சொந்தம் புரியும்
நெஞ்சில் விழுந்தால் சொந்தம் புரியும்

ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல்

உன்னையறிந்தேன் என்னைக் கொடுத்தேன்
உள்ளம் முழுதும் எண்ணம் வளர்த்தேன்
உன்னையறிந்தேன் என்னைக் கொடுத்தேன்
உள்ளம் முழுதும் எண்ணம் வளர்த்தேன்
உன்னை நினைத்தே உலகில் இருந்தேன்
உன்னைப் பிரிந்தேன் என்னை மறந்தேன்
உன்னை நினைத்தே உலகில் இருந்தேன்
உன்னைப் பிரிந்தேன் என்னை மறந்தேன்

ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உந்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல்

# சூடானை புரட்டி எடுக்கும் போர்

போரால் பாதிக்கப்பட்டிருக்கும் உக்ரைன், காசா மக்களின் வலியைப் பற்றி உலகமே பேசிக்கொண்டிருக்கும் வேளையில், அதே வலியை 15 மாதங்களாக உள்நாட்டுப் போரால் அனுபவித் துக்கொண்டிருக்கும் சூடான் மக்கள் கேட்பாரற்றுக் கிடக்கிறார்கள்.

**என்ன பிரச்சனை?**

வடகிழக்கு ஆபிரிக்காவில் அமைந்திருக்கும் சூடான்தான் ஆபிரிக்கக் கண்டத்தின் மூன்றாவது பெரிய நாடு. சுமார் 30 ஆண்டுகளாக சூடானின் அதிபராக இருந்த அல் பஷீரின் ஆட்சியை 2019 இல் கவிழ்த்தது சூடான் இராணுவம்.

இதையடுத்து, 'அடுத்த தேர்தல் நடைபெறும் வரை, குடிமக்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து சூடானை ராணுவமே ஆட்சிசெய்யும்' என அறிவித்தார் ராணுவத் தளபதி அப்தெல் ஃபட்டாஹ் அல் புர்கான்.

கடந்த ஆண்டின் மத்தியில், குடிமக்களின் பிரதிநிதிகளுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், முழுமையாக ஆட்சியைத் தங்கள் வசம் எடுத்துக்கொண்டது சூடான் இராணுவம். கூடவே, துணை இராணுவப் படையான ஆர்.எஸ்.எஃப் (Rapid Support Forces), சூடான் முழுவதும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுவந்தது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ஏப்ரலில், ஆர்.எஸ்.எஃப்-ஐ சூடான் இராணுவத்துடன் இணைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. இராணுவம் ஒரு தலைவருக்குக் கீழ் வரும் சூழலில், 'படைத் தளபதி யார்?' என்ற அதிகாரப் போட்டி வெடித்தது. இராணுவத் தளபதி அல் புர்கானுக்கும், துணை இராணுவத் தளபதி ஹம்தானுக்கும் இடையே வார்த்தை அளவிலிருந்த மோதல், ஏப்ரல் 15, 2023 அன்று ஆயுத மோதலாக மாறியது.

**அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்கள்!**

இந்த உள்நாட்டுப் போரில், இதுவரை சுமார் 15,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்கிறது ஐ.நா. சுமார் 4.6 கோடிப் பேர் வாழும் சூடானில், 86 லட்சம் பேர் வீடுகளை இழந்திருக்கின்றனர். 1.8 கோடிப் பேர் தீவிரப் பசிக் கொடுமையால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஐந்து வயதுக்குக் கீழுள்ள 35 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் அவதிப்படுகின்றனர். நாடு முழுவதுமுள்ள 65 லட்சம் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது.

உலகிலேயே, அதிக எண்ணிக்கையில் உள்நாட்டிலேயே மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வது சூடானில் தான் என்கிறது ஐ.நா.

உள்நாட்டுப் போரால் வீடுகளை இழந்த சிலர் காட்டுக்குள் குடியேறியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. சில லட்சம் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி, அண்டை நாடான சாட்-ல் (Chad) அகதிகளாக வாழ்ந்துவருகின்றனர். சொந்த நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் உணவைப் பெறுவதற்காகப் பல்வேறு கொடுமைகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். குறிப்பாக, பாலியல் சுரண்டல் போன்ற மிகப் பயங்கரமான கொடுமைகளை அனுபவிக்கின்றனர்.



இந்த நிலையில், கடந்த வாரம் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருக்கிறது அமெரிக்கா. ஓகஸ்ட் 14 அன்று, சுவிட்சர்லாந்தில் வைத்து அமைதிப் பேச்சுவார்த்தை நடக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பேச்சுவார்த்தை வெற்றியில் முடிந்து, சூடான் மக்களுக்கு விடியல் பிறக்க வேண்டுமென்பதே மனித உரிமை ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு!

சங்குநாதத்திற்கு எழுதுங்கள்
உங்கள் அபிமான சங்குநாதத்தில்
• கவிதைகள்
• கட்டுரைகள்
• அரசியல் விமர்சனங்கள்
• ஊர் புதினங்கள்
• நீங்கள் ரசித்த விடயங்கள்
என்பவற்றை உங்கள் முழுப்பெயர்,
முகவரியுடன் எழுதி அனுப்புங்கள்
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்,
[illegible]றவுண்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

411

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தேன் மருத்துவத்துறையில் 5000 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது

**தே**ன் மிகவும் சுவையானது அதனால் தான் நம் முன்னோர்கள் தமிழை தேனுடன் ஒப்பிட்டு தேனிலும் இனியது தமிழ் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். பண்டைய தமிழ் மருத்துவ முறைகளிலே தேன் ஒரு முக்கிய பங்கு வகித்திருக்கிறது. இது மருத்துவத்துறையில் 5000 வருடங்களுக்கு மேலாக பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இத்துணை அதீத இனிப்புச் சுவை கொண்ட தேன் உண்மையிலேயே உடல் நலத்துக்கு பாதுகாப்பானதா? இது சம்பந்தமான ஆய்வுகள் ஏதாவது நடத்தப்பட்டிருக்கின்றனவா? நீரிழிவு உள்ளவர்கள் இதனை பாவிக்கலாமா? என்பது போன்ற பல வினாக்கள் எம்முன்னே எழுகின்றன.

தேன் என்றால் என்ன? அதில் என்னென்ன பதார்த்தங்கள் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் முதலில் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.


தேனிலே பிரக்ரோஸ், குளுக்கோஸ், மோல்ரோஸ், சுக்ரோஸ் எனப்படும் 4 வகையான வெல்லங்கள் காணப்படுகின்றன.

அத்துடன் இத்தேனிலே புரதத்தின் அடிப்படை அலகுகளான அமினோ அமிலங்கள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக தேனிலே பெருமளவு விற்றமின்கள் செறிந்து காணப்படுகின்றன. விற்றமின் B2,B4, B5, B6, B11, விற்றமின் K, விற்றமின்C, போலிக்கமிலம் போன்ற பல விற்றமின்கள் ஒன்றாகக் காணப்படுகின்றன.

இவற்றோடு பல முக்கியமான கனியுப்புக்களையும் இந்த் தேன் உள்ளடக்கி இருக்கிறது. இரும்பு,நாகம், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், செலேனியம்,மங்கனீசு போன்ற பல கனியுப்புக்களின் கலவையாகவும் இது காணப்ப டுகின்றது.

இவை அனைத்தையுமே தேன் உள்ளடக்கி இருப்பதால் இது உலகிலே கிடைக்கக்கூடிய இயற்கையான விற்றமின் ரொனிக்குகளில் முதல் தரமானதாக கணிக்கப்படுகிறது.



தேனிலே நோய்க்கிருமிகளை கொல்லும் தன்மையும் அவற்றின் பெருக்கத்தை தடுக்கும் தன்மையும் இருப்பது பல ஆய்வுகளின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

காயங்களுக்கு இதனை பூசி விடும்பொழுது இது தொற்று ஏற்படாமல் தடுக்கும் ஒரு கவசமாகவும் தொற்று ஏற்படுத்தும் கிருமிகளை கட்டுப்படுத்தும் ஒரு மருந்தாகவும் தொழிற்படுவதாக ஆய்வுகள் காட்டிநிற்கின்றன.

அத்துடன் தேனானது ஒரு அன்ரி ஒக்சிடென்ற் ஆகத் தொழிற்பட்டு உடற்கலங்களை பாதுகாக்க உதவுகிறது என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

தேன் சம்பந்தமான ஆரம்ப ஆராய்ச்சிகள் குருதியிலே HDL எனப்படும் நல்ல கொலஸ்ரோலை அதிகரிப்பதற்கும் trigliceride எனப்படும் தீய கொழுப்பை குறைப்பதற்கும் தேன் உதவிபுரிகின்றது என்பதை காட்டி நிற்கின்றது.

உடலில் ஏற்படும் அழற்சி பல நோய்களுக்கு வித்திடுகின்றது. தேன் Inflammation என்று சொல்லப்படுகின்ற உடலில் ஏற்படும் அழற்சிகளை கட்டுப்படுத்துகின்றது. இதன்காரணமாக இது நாட்பட்ட வரண்ட இருமலையும் தொண்டை அழற்சியையும் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் குடலில் ஏற்படும் அழற்சிகளை குறைத்து வயிற்றோட்டத்தை கட்டுப்படுத்த உதவுகிறது. ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தேன் கொடுப்பது நல்லதல்ல.

நீரிழிவு உள்ளவர்களுக்கு தேன் சிறந்ததா? என்பது சம்பந்தமாக பல்வேறுபட்ட ஆராய்ச்சி முடிவுகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. நீரிழிவு உள்ளவர்களில் இரத்தத்தின் கொழுப்பை குறைப்பதற்கும் இன்சுலீனின் சுரப்பு வீதத்தை அதிகரிப்பதற்கும் தேன் உதவுகின்றது.

ஆனால் அதிகளவு தேனை உட்கொண்டால் நீரிழிவு உள்ளவர்களிலே குருதி குளுக்கோசின் அளவு அதிகரிப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பானது அதனை ஒத்த சீனி உட்கொள்ளும் பொழுது ஏற்படும் அதிகரிப்பினும் பார்க்க குறைவாக காணப்படுகிறது.

எனவே நீரிழிவு உள்ளவர்கள் அதிகளவு தேன் உட்கொள்ளுவது பாதுகாப்பானதா என்பது பற்றி விரிவான ஆய்வுகள் பல செய்யப்படவேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் தேனானது சீனியிலும் பார்க்க பல மடங்கு பாதுகாப்பானது என்பது தெளிவானது, உறுதியானது.

உலகளாவிய அளவிலே வருடம்தோறும் 1.3 million தொன் தேன் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. காரணம் இதனை உணவாகவும் மருந்தாகவும் விற்றமின் ரொனிக் ஆகவும் வெளிப்பூச்சு மருந்தாகவும் பலராலும் பாவிக்கப்பட்டு வருவதால் இதன் தேவை அதிகமாக இருக்கிறது.

எமது பிரதேசங்களிலே தேன் உற்பத்தியின் அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. இது ஊக்குவிக்கப்பட வேண்டும். பயிர்களுக்கு மருந்து விசிறுவது தேனீக்களை அழித்து விடுகின்றது.

ஒரு விவசாயி தனது தோட்டத்திற்கருகே தேனீ வளர்க்கிறான் என்றால் அவன் ஒரு இயற்கை விவசாயி என்பதை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் தேவைப்படாது. மருந்தடிக்கும் சூழலில் தேனீ வளர்க்க முடியாது. எனவே தேனீ வளர்ப்பு மருந்து தெளிக்காத பயிர்ச் செய்கையையும் மறைமுகமாக ஊக்குவிக்கும்.

எனவே தேனீ வளர்ப்பில் நாம் கூடிய அக்கறை செலுத்தி இயற்கையை பாதுகாப்புடன் தேன் உற்பத்தியையும் பெருக்க முயற்சி எடுக்க வேண்டும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது மருத்துவ நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை


## நம் நடை பல நன்மையான பாதப்பதிவுகளை உருவாக்கட்டும்

பைபிளின் நற்செய்தியில் யோவான் 6:24-35 பகுதி இன்று தரப்படுகின்றது. இயேசுவும் அவருடைய திருத்தூதர்களும் திபேரியாவில் இல்லை என்பதைக் கண்ட மக்கள் கூட்டமாய் படகுகளில் ஏறி இயேசுவைத் தேடிக் கப்பர்நாகுமுக்குச் சென்றனர். வழிநடத்துபவர் தம்மிடையே இல்லையென அறிந்த மக்கள் இவ்வாறு கூட்டமாய் சென்றனர். நம்மை வழிநடத்துவோரைத் தலைவர்கள் நாம் என்கிறோம். நாட்டை வழிநடத்துவோரை அரசியல் தலைவர்கள் என்கிறோம். உலக அரசியலை அலசிப்பார்த்தால் பலதலைவர்கள் தங்கள் நாட்டை வழிநடத்துவதற்குப் பதிலாகச் சுயநலத்துக்காகவும் புகழுக்காகவும் அரசியலை அசிங்கப்படுத்தியதையும் நாட்டை நாசமாக்கியதையும் நாம் அறிவோம்.

தலைமுறைகள் தலைமுறைகளாக ஆண்டுகள் பல உருண்டோடினாலும் நம் உத்தம தலைவர் இயேசுவை நம்மால் மறக்கவே முடியாது. ஏனெனில் அவர் எம்நடுவில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இன்றும் அவரைத் துதிபாடும் கூட்டம் தானாய்ச் சேர்ந்த கூட்டம். அவர் புகழ் பாடுகிற கூட்டம் தானாய்ச் சேர்ந்த கூட்டம். அவருக்கு அல்லேலூயாப் பாடுகின்ற கூட்டம் தானாய்ச் சேர்ந்த கூட்டம். இவை அனைத்துமே தானாய்ச் சேர்ந்த கூட்டம். அவர் தன் அன்பால், இனிய பண்பால், பாசத்தால், தாழ்ச்சியான பதவியால் சேர்த்த கூட்டம்.

இயேசு கிறிஸ்து தன்னுடைய அன்பால், இனிய பண்பால், பாசத்தால், பாராட்டால் பல மக்களை தன் பக்கம் காந்தத்தைப் போல இன்றும் ஈர்ப்பதைப் நாம் பார்க்கின்றோம். இயேசு சென்ற இடமெல்லாம் மக்கள் சாரை சாரையாய் சென்றனர். இயேசுவைத் தேடி மலைப்பகுதிக்குச் சென்றனர். கூட்டமாய் படகேறி அவரைப் பார்க்கச் சென்றனர் என பைபிள் கற்பிக்கின்றது. பாலைவனத்திற்குச் சென்றனர். ஆலயத்திற்குச் சென்றனர். கடற்கரைக்குச் சென்றனர். கட்டாந்தரைக்குச் சென்றனர். எப்பொழுதும் அவரைச் சுற்றி பார்க்குமிடமெங்கும், திரும்பும் திசையெல்லாம் திரளான பெரும் மக்கள் கூட்டம் நின்றுக் கொண்டிருந்தது.

முகத்தில் அருள் இருந்ததால் இயேசுவின் முகத்தை பார்க்க அந்த மக்கள் கூட்டம் அதிகமாக ஆசை கொண்டது. ஏனெனில் அந்த முகம் அருளால் நிறைந்திருந்தது. பக்கத்தில் போனால் பாதுகாப்பு, பராமரிப்பு கிடைக்கும் என்பதை அந்த முகம் சொல்லிக் கொண்டே இருந்தது. மாசுபடியாத அந்த முகம் மகிழ்ச்சியை மட்டுமே முகிழ்ந்து கொண்டிருந்தது. யாரையும் பார்த்து முறைக்காத அந்த முகம் பளபளவென ஒளி வீசியது. மறுபடியும் திரும்பத் திரும்ப பார்க்க தூண்டும். பார்க்க வேண்டும் என்ற



ஆசையை அந்த முகம் மக்களுக்குக் கொடுத்தது. அருள் நிறைந்த மேரிமாதாவிடமிருந்து வந்த அந்த அருள் நிறைந்த முகம் அனைவருக்கும் ஆசீரை அள்ளி அள்ளி கொடுத்தது.

இசேுவின்இதயத்தில் ஈரம் இருந்தது. இயேசு என்றால் ஆள்பரிவு, பந்தபாசம், பரிவிரக்கம், இனிமை, அன்பு, அரவணைப்பு, ஆறுதல், அடைக்கலம் என்றெல்லாம் பொருள் உண்டு. இயேசுவின் இதயம் முழுவதும் ஈரம் இருந்தது. அந்த ஈரம் தன்னை நாடி வந்த அனைவரையும் நனைத்தார். பார்த்த எல்லோரையும் அன்பினால் அதிசயப் படுத்தியது. இனிய பண்பினால் அன்புப் பாடம் புகட்டியது.

எங்கள் இதயம் எப்படிப்பட்டது. கல்லையும் கசிந்துருகவைக்கும் கனிவான இதயமா? கனிவான இதையத்தையும் கல்லாக்கும் இதயமா? கனிவான இதயமே பலருக்கு பயன்படும். ஈரமான இதயமே வெறுமையில் தவிப்போருக்கு நிறைவைத் தரும். நல்ல இதயம் ஒன்று தா என் இயேசுவே இன்று எனக்குத் தா என கேட்டுப் பெற்றுக்கொள்வோம்.

நல்லாயன் இயேசுவின் நடையில் நல்லது நடந்தது. எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார். அவர் எடுத்து வைத்த ஒவ்வொரு காலடியும் பிறருக்கு நன்மை செய்வதற்காகவே இருந்தது. அவர் கால் பட்ட இடங்களில் நன்மை நடந்தது. அவர் நடை பல நன்மையான பாதப்பதிவுகளை உருவாக்கியது. அந்த நடை சாதராண நடையல்ல. பலரை நல்வழிப்படுத்திய நடை. பலரை பக்குவப்படுத்திய நடை. எங்கள் நடையினால் நன்மை இருக்கிறதா? எங்கள் நடை பகையை பறந்தோடச் செய்யட்டும். பாவ வழியை விட்டு விலகி நடக்கட்டும். நல்லாயன் இயேசுவின் பாதையில் நாமும் நடப்போம்.

ம.பிரான்சிஸ்க் - கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
1959 . 04 . 27



இறப்பு
2024 . 08 . 03

## அமரர்.ஜெகதீஸ்வரன் நிர்மலா

( இரட்ணாஸ் வைண்டிங் வேக்ஸ் உரிமையாளரின் மனைவி )

முருகனகம், வாளித்தொழிற்சாலை வீதி, பளை வீமன்காமம் வடக்கு மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல 37/ 22, 1ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் நிர்மலா அவர்கள் 03. 08. 2024 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- கமலாதேவி தம்பதி யினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீ.கே அன்னலிங்கம் மற்றும் இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெகதீஸ்வரன் (இரத்தினாஸ் வைண்டிங் வேக்ஸ்) அன்பு மனைவியும், சஞ்ஜீவன் (இரத்தினாஸ் உரிமையாளர்), சோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் RDHS முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனராணி, சாந்தி, சிவபாலன், உமைபாலன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், யோகேஸ்வரன் (சுவிஸ்), அருளேஸ்வரன் (அன்னலிங்கம் அன்சன்ஸ் மன்னார்), இராஜேஸ்வரன் (இரட்ணாஸ் மோட்டோர்ஸ் கிளிநொச்சி), கிரிஜா, விமலேஸ்வரன் (அன்னலிங்கம் அன்சன்ஸ் மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 05.08.2024 நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது மாவிட்டபுர இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(1618)

வாளித்தொழிற்சாலை
வீதி,பளை வீமன்காமம்
வடக்கு, மாவிட்டபுரம்.

தகவல்- குடும்பத்தினர்
077 071 1521 / 077 612 2364

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில்
10 . 05 . 1939



பொன்னுலகில்
28 . 07 . 2022

எமது அன்புத் தெய்வம்

## அமரர். பரமேஸ்வரி சிவயோகலிங்கம்

ஓய்வுநிலை உப அஞ்சல் அதிபர், மருதடி, பருத்தித்துறை.

திதி; 04.08.2024 (ஆடி அமாவாசை)

புவிநீங்கி ஆண்டு இரண்டு கடந்திட்டாலும் –உங்கள் முகம்
ஓவியமாய் பதிந்திருக்கிறது – எங்கள் மனங்களிலே

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அனைவர் உள்ளங்களையும்
கொள்ளை கொண்டு விட்டீர்கள் – உங்கள் அன்பினாலே

உங்கள் புன்னகை தவழும் முகமும் அப்பழுக்கற்ற செயல்களும்
கணீரென்ற கம்பீரமான குரலும் பல உள்ளங்களை
– ஆறுதல்படுத்தியது

எனின் உங்கள் உறவுகளின் மனங்களை–கண்ணீரில்
மிதக்கவிட்டு
இறையடி சேர்ந்தாயோ – விதியின் வசத்தால்

தேறுதலின்றியே ஏங்கித் தவிக்கிறதே – எம்மனங்கள்
அல்லும் பகலும் அனைவரதமும் – உங்கள் நினைவுகளால்

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் – உங்கள் நினைவுகள்
நிழலாய்த் தொடரும் எம் நெஞ்சங்களில்.

செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பார்
நல்விருந்து வானத்தவர்க்கு – என்ற பொய்யாமொழி

நற்றவ வானிலே வீரபத்திரர் துணையோடு
உங்கள் ஆத்மாவைச் சாந்திபெற வைக்கும் – இது திண்ணம்

உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல. 440, பிரதானவீதி,
பருத்தித்துறை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
கணவர் மற்றும் குடும்பத்தினர்.
021 226 3885/ 077 805 2884

(1695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவையாறு மகா வித்தியாலயத்திற்கு

# பேருந்து சேவையினை நடத்துமாறு பெற்றோர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்திற்கான பேருந்து சேவையினை நடத்துமாறு பெற்றோர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்பு வட்டக்கச்சிக்கு செல்கின்ற பேருந்து பாடசாலைக்கு வந்து சென்றது. தற்போது இப்பேருந்து சேவை நடைபெறுவதில்லை. கிளிநொச்சி பேருந்து சாலையில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் திருவையாறு மகா வித்தியாலயம் உள்ளது. பிற மாவட்டங்களில் இருந்து வருகை தரும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்து செல்வதில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளையினர் இரத்தினபுரம் வழியாக திருவையாறு மகா வித்தியாலயம் சென்று கனகாம்பிகைக்குளம், இரணைமடுச் சந்தி ஊடாக மீண்டும் கிளிநொச்சிக்கு வருகை தரக் கூடிய வகையில் பேருந்து சேவையினை நடத்துவதன் மூலம் திருவையாறு கிராம மக்களும் ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமன்றி கனகாம்பிகைக்குளம், சாந்தபுரம் போன்ற கிராமங்களின் மக்களும் பயனடைவார்கள். தற்போது திருவையாறு மகா வித்தியாலயத்தில் 680 மாணவர்கள் கல்வி கற்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-350)

# 'ஈழத்தமிழ் முதுசம் விருது' வழங்கி கௌரவிப்பு




(அக்கராயன்)

ஈழத்து கலை இலக்கியத் துறையில் ஐந்து தசாப்தங்களைத் தாண்டிப் பயணிக்கும் கலாநிதி -தமிழ்மணி அகளங்கனின் அர்ப்பணிப்பான தமிழ்ச் சேவையைப் பாராட்டி அடங்காப்பற்றுத் தமிழ்ச் சங்கத்தினரால் "ஈழத் தமிழ் முதுசம்" எனும் விருது வழங்கி கௌர விக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் கலாசார மண்டபத்தில் இக் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது. (நி-350)

# அபிஷேகக் கந்தனின் தேர்த்திருவிழா





(யாழ்ப்பாணம்)

"அபிஷேகக் கந்தன்" எனப் போற்றி சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய காம்யோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (நி-33)

# இந்துக்களால் காலகாலமாக நிறைவேற்றிவரும் ஆடி அமாவாசை பிதிர் வழிபாடு



சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாவசையில் அதிபர்களாக உள்ளனர். பூமியில் உள்ளவர்களை பொறுத்த மட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதிர்கருமத்திற்கு அதாவது தென் புலத்தார் வழிபாட்டிற்கு மிக உகந்த நாள். சூரிய மண்டலத்திற்கு அப்பால் தென் மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர்லோகம் உள்ளது.

பிதிர்களை தென் புலத்தார் என்று அழைப்பது தமிழர்கள் மரபு. தென் புலத்தார் வழிபாடுகளில் எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவசையில் விரதமிருந்து கருமங்கள் ஆற்ற வேண்டும்.

**பிதிர் வழிபாடு அவசியம் செய்ய வேண்டும்**

ஆடி அமாவாசை பிதிர் தருமாங்களுக்கு மிகவும் உகந்தது. பிதிர் வழிபாடுகள் செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசை செய்ய வேண்டும் என்று நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதிர் தர்ப்பணத்துக்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்ளை.

**முன்னோர்களுக்கு முக்தியளிக்க வேண்டும்.**

ஆடி அமாவாசை தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழைய வினைகள் அறும் என்றும் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் என்றும் கூறுவர்.

தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைத்து முன்னோர்கள் பிதிர்களை எண்ணி அவர்களின் பாவங்களை போக்கி அவர்களுக்கு முக்தியளிக்கும்படி இறைவனை வேணட தீர்த்த மாடுதல் வேண்டும்.

**பிதிர் வாழிபாடே வாழ் வாங்கு வாழ வைக்கும்**

அமாவாசை, பௌர்ணமி தினாங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இவ்வாறே இந்த தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாக கூறப்படுகின்றது.

எனவே தான் அமாவாசை போன்ற கணத்த நாட்கள் மிக அவதானமாக கழிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நாட்களில் வேறு காரியங்களை செய்யாது மணங்களை புலன்கள் வழி செல்ல விடாதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்தனர். இந்த தினங்களில் கடவுள் வழிபாடு பிதிர் வழிபாடு என்பவற்றை செய்து நல்ல பயனை பெறுவது முறையாகும்.

**பிதிர்களை திருப்தி செய்து மகிழ்வித்தல்.**

ஆடி அமாவாசையில் தீர்த்த மாடுதல் பிதிர் வழிபாடு செய்தல் தர்ப்பணம், பிண்ட தானம் நிறை வேற்றுதல் என்பன ஆண்டு தோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும் மட்டக்களப்பு அமிர்த கழி மாமாங்கேஸ் வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறு பல சிவத்தலங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

நாங்கள் நோயின்றி சுகமாக வாழவும் சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கின்றோம். அதற்கு பிதிர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றுக்குரிய விதிமுறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர்.

பராசர் மனு விதுதர், சாதாதபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து "தர்ம சாஸ்திர நிபந்தனை" எனும் சிறந்த நூலாக தொடுக்கப்பட்டுள்ளது.

**தட்சணாயன தொடக்கம் இறை வழிபாடுக்குரிய நாட்கள்**

தட்சணாயன தொடக்க மாதம் ஆடி என்பதால் பிதிர்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது என கொள்ளப்படுகின்றது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டுக்கு புண்ணியமான தினம் என சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

இந்த புண்ணிய காலங்களில் இன்று இந்துக்களால் தமிழ் பிரதேசம் எங்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றி ஆடி அமாவாசை விரதம் நிறைவேற்றப்படுகின்றது.

வடபுலத்திலே தமிழர்களின் வரலாற்றுப் பெரு மைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஈஸ் வரங்களுள் (கீரிமலை சிவன் கோவில்) கீரிமலை எனும் புனித கங்கையில் பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் பிதிர்த்தர்ப்பணம் செய்து கொள்வர்.

**மதுரகவி.**
**காரை.எம்.பி.அருளானந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் தடைக்கல்லாய் காண்பதற்குப் பதில், வெற்றியின் படிகளாய் காண்போம்!

– அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## 'இலக்குவணா' என்று அலறிய மாரீசன் போல வருவார்கள்

வனவாசம் அனுபவிக்கின்ற இராமபிரானுக்கு பெரும் சோகம் வந்துற்றது.

ஆம், சீதா பிராட்டியைக் கவர்ந்து செல்லத் துணிந்த இராவணன், மாயாவித்தையில் வல்லவனான தன் மாமன் மாரீசனை துணைக்கு அழைக்கின்றான்.

சீதையைக் கவரும் பொருட்டு மாய வடிவம் எடுக்குமாறு இராவணன் மாரீசனைக் கேட்க, அவன் மறுதலிக்கின்றான்.

இருந்தும் இராவணனின் ஆட்சியில் இருக்கக்கூடிய ஒருவன் மன்னனின் கட்டளையை ஏற்க மறுப்பது ஏற்புடையதல்ல என்பதால், சீதையை கவர்ந்து செல்லும் பொருட்டு மாய வித்தையைச் செய்ய உடன்படுகின்றான் மாரீசன்.

மாயமானாக உருமாறி சீதைக்கு முன்பாக துள்ளிக் குதிக்க – அந்த மான் மீது ஆசை கொண்ட சீதையாள் தன் கணவன் இராமனிடம் மானைப் பிடித்துத் தருமாறு கேட்கிறாள்.

மனையாளின் விருப்பை நிறைவேற்றுவதற்காக மாய மானைப் பிடிப்பதற்காக இராமர் செல்கிறார்.

மாய மானாக வந்தவன் மாரீசன் என்றுணர்ந்த இராமபிரான் அவன் மீது அம்பு தொடுக்க, விழுப்புண் பட்ட மாரீசன் **இலக்குவணா** என இராமன் அழைப்பதுபோல அழைத்து கீழே விழுந்து இறந்து போனான்.

இங்குதான் உயிர் துறக்கின்ற வேளையிலும் கெடுதி இழைக்கும் எண்ணம் மாரீசனிடம் இருந்தமை உணர்தற்குரியது.

அதன்பின்னர் சீதைக்குக் காவலாக இருந்த இலட்சுமணன் இராமனைத் தேடிச் செல்ல, அதுவரை காத்திருந்த இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான் என்பது கதை.

இங்குதான் வந்திருப்பது மாய மான் என்பதை அவதார புருசராகிய இராமனால் கூட உணர்ந்து கொள்ளமுடியவில்லை என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது.

ஆக, இது ஜனாதிபதித் தேர்தல் காலம். முன்னெப்போதும் இல்லாதவாறு மும்முனைப் போட்டி நடக்கப் போகிறது. இங்குதான் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு வேட்பாளர்கள் மாய வித்தைகள் காட்டுவர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்களுக்குத் தீர்வு எட்டப்படும் என்று உறுதிமொழி தருவர்.

அதை நாமும் நம்பி ஏமாந்து போவோம். இதுவே எமக்கான கடந்த கால அனுபவம்.

ஆகையால், இதுவிடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் மிகவும் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் எமக்குத் தருகின்ற உறுதிமொழிகள் எந்தவகையில் உறுதி செய்யப்பட்டால், அதிலிருந்து அவர்கள் விலக முடியாதோ அந்த வகையில் உறுதிமொழிகளையும் உத்தரவாதங்களையும் நாம் பெற்றாக வேண்டும்.

இதைச் செய்யத் தவறுவோமாயின், அதன் முதல் விளைவு தமிழ் அரசியலை இல்லாதொழித்து விடுவதாக அமையும்.

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் சம்பவங்கள் அதிகரிப்பு

### குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

கட்டுநாயக்க விமான நிலையத்தில், கடந்த 5 வருடங்களில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 181 போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

எல்லை கண்காணிப்பு பிரிவின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வெளியிட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 62 போலி ஆவணங்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மண்டலாபிஷேகப் பூர்த்தியும் கும்பாபிஷேக மலர் வெளியீடும்

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்பு வயல் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தியும் கும்பாபிஷேக மலர் வெளியீடும் இன்று(04) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று காலை கிரியைகள் ஆரம்பித்து விசேட பூசை வழிபாடுகளுடன் மண்டலாபிஷேகப் பூர்த்தி இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் மஹா கும்பிஷேக மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் கலந்து கொள்வார். (ம-7)

## அபிஷேகக் கந்தனுக்கு இன்று தீர்த்தோற்சவம்

(மாவிட்டபுரம்)

அபிஷேகப் பிரியனான மாவைக் கந்தப் பெருமானின் தீர்த்தோற்சவப் பெருவிழா ஆடி அமாவாசை புண்ணிய நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை கண்டகி தீர்த்தக்கரையில் சிறப்புற இடம்பெறவுள்ளது.

இன்று அதிகாலை 3.00 மணிக்கு முருகப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் அதிகாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறும்.

அதிகாலை 5.30 மணியளவில் மாவைக் கந்தனின் கீரிமலை விஜயம் இடம்பெற்று 6.30 மணியளவில் கண்டகி தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

இந்நாளில் மாலை வரை கந்தப்பெருமான் கீரிமலையிலேயே தரித்து நின்று பக்தர்களுக்கு அருள்பாலிப்பதோடு மாலை கலைநிகழ்வுகள் சகிதம் மாவிட்டபுரத்தினை வந்தடைவது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஆடி அமாவாசையை முன்னிட்டு சிவபூமி அறக்கட்டளையால் கீரிமலையில் விசேட ஏற்பாடு

ஆடி அமாவாசையினை முன்னிட்டு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் தமது முன்னோர்களுக்கான பிதிர்க்கடனை ஆற்றவரும் அடியவர்களின் நலன் கருதி சிவபூமி அறக்கட்டளையின் கீரிமலை சிவபூமி மடம் இவ்வாண்டும் விசேட ஏற்பாடுகளினை மேற்கொண்டுள்ளது.

அதன் பிரகாரம் இன்று அதிகாலை 4.00 மணிமுதல் தேநீர் விநியோகம் மற்றும் மக்கள் இளைப்பாறிச் செல்வதற்கான தங்குமிட வசதிகளினையும் ஒழுங்கு செய்துள்ளதோடு காலை 8.00 மணிமுதல் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளதோடு தாக சாந்திக்குரிய ஏற்பாடுகளும் கீரிமலை சிவபூமி மடத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாராளுமன்றத்திற்கு அருகில் பாரிய விபத்து

### நான்கு இளைஞர்கள் படுகாயம்

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகத்துடன் பயணித்த கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, நான்கு இளைஞர்கள் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்

### கைதாகி மறியலில்

மன்னார் - நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான ரொஜன் ஸ்டாலின் என்பவரை இலுப்பைகடவை பொலிஸார் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் மணல் அகழ்வு தொடர்பான முரண்பாடு ஒன்றில் ஆத்திமோட்டை விவசாய அமைப்பின் தலைவரும் தமிழரசு கட்சியின் பிரதேச சபை வேட்பாளருமான நபர் ஒருவரை தாக்கி காயப்படுத்திய நிலையில் குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

இவ் வழக்கில் நீண்ட நாட்களாக வாக்குமூலம் வழங்க குறித்த வர்த்தகரை இலுப்பை கடவை பொலிஸார் அழைத்த நிலையில் நீண்ட நாட்கள் வாக்குமூலம் வழங்காத நிலையில் நீதிமன்றத்திலும் முன்னிலையாகாமல் இருந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த மாதம் நீதிமன்றத்தில் குறித்த நபர் ஆஜராகிய நிலையில் வாக்குமூலம் உடனடியாக வழங்குமாறு நீதவானால் உத்தரவிடப்பட்டது.

இருப்பினும் வாக்குமூலம் வழங்க வருகை தந்தும் வாக்குமூலம் வழங்காது தப்பித்து சென்றதாக குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ம-7,285)

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு 732 சந்தேகநபர்கள் கைது

கடந்த 24 மணித்தியாலத்திற்குள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 732 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 719 ஆண்களும் 13 பெண்களும் உள்ளடங்குவதோடு சந்தேக நபர்களில் 10 பேர் பொலிஸ் தடுப்பு காவலிலும்10 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 260 கிராம் 76 மில்லி கிராம் ஹெரோயின், 250 கிராம் மில்லி 02 கிராம் ஐஸ், 21,139 கிராம் மில்லி 574 கிராம் கஞ்சா,168 போதை மாத்திரைகள் மற்றும் 1,906 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் மாத இராசி பலன்கள்-2024



## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்,

கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - களத்திர ஸ்தானத்தில் சனி (வ) - அஷ்டம ஸ்தானத்தில் ராகு - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய், குரு - லாப ஸ்தானத்தில் சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன்

கிரகமாற்றங்கள்: 01-08-2024 அன்று சுக்கிரன் அயன சயன போக

பலன்கள்: நீங்கள் எதிர்ப்பவர்களை தக்க சமயத்தில் வெற்றி கொள்வீர்கள். இந்த மாதம் பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும். மனதில் சந்தோஷம் உண்டாகும். எந்த பிரச்சினை வந்தாலும் சமாளித்து முன்னேறிச் செல்வீர்கள். தெளிவான முடிவுகள் எடுப்பதன் மூலம் இழுபறியான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். தன ஸ்தானத்தில் இருக்கும் குருவால் பொருளாதாரம் மேலோங்கும்.

மற்றவர்கள் பாராட்டக் கூடிய மிகப் பெரிய செயலை செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக நடை பெறும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஓர்டர்கள் கிடைக்கும். முக்கிய நபர்களின் ஆதரவும் கிடைக்கப் பெறு

மகிழ்ச்சி உண்டாகும். கலைத்துறையி னருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். எல்லாக் காரியங்களும் நல்ல படியாக நடக்கும்.

எடுத்து கொண்ட வேலைகளில் இருந்த பிரச்சினைகள் தீரும். ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். அரசியல் துறையினருக்கு ஆயு தங்கள் கையாளும் போதும் வாகனங் களை ஓட்டும்போதும் எச்சரிக்கை அவ சியம். வீண் செலவு ஏற்படும். அடுத்த வருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். மாணவர்க ளுக்கு கல்வியில் முன்னேற்றம் உண் டாகும். எதிர்ப்புகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

மகம்: இந்த மாதம் தொழில் வியாபாரம் மூலம் வர வேண்டிய லாபம்



ஒரு காரியத்தையும் செய்து முடிக்கும் வரை அந்த காரியம் முடியுமோ, முடியாதோ என்ற மனக்கவலை இருக்கும். வீண் அலைச்சல் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவது பற்றிய மனக்கவலை

## பெரியோர்களின் ஆசிகளைப் பெற்று வாழ்வில் சாதனைகள் புரியும் சிம்ம இராசியினரே

ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார் ; 16-08-2024 அன்று சூரியன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார் ; 26-08-2024 அன்று சுக்கிரன் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 26-08-2024 அன்று செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 31-08-2024 அன்று புதன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார்.

வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்க ளின் பணம் சம்பாதிக்கும் திறமை அதிகரிக்கும். மேலதிகாரிகள் கொடுத்த வேலையை திறமையுடன் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். குடும்பத் தில் இருந்த டென்ஷன் நீங்கும்.

கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிக ரிக்கும். நண்பர்களால் தேவையான உதவி கிடைக்கும். பெண்களுக்கு எந்த தடைகளையும் தாண்டி எடுத்த காரி யத்தில் வெற்றி பெறுவீர்கள். மனதில்

தாமதப்படும். எதிர்பார்த்த நிதியுதவி ஓரளவு கிடைக்கும். ஓர்டர்களுக்காக இருந்த அலைச்சல் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்பம் இல்லாத மாற்றம் வரலாம்.

பூரம்: இந்த மாதம் குடும்பத்தில் வீண்வாக்குவாதங்கள் ஏற்படும். கண வன், மனைவிக்கிடையே நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பிள்ளைகள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது.

உத்திரம் 1ம் பாதம்: இந்த மாதம் எந்த

இருக்கும். சகமாணவர்களுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**பரிகாரம்:** அருகில் இருக்கும் சிவன் ஆலயத்திற்குச் சென்று ஞாயிற்றுக்கிழமையில் அபிஷேகம் செய்து வணங்க எல்லா தொல் லைகளும் நீங்கும். எதிர்பார்த்த காரியம் நன்றாக நடக்கும் ;

**அதிர்ஷ்ட கிழமைகள்:** சூரியன், வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 22, 23

**அதிர்ஷ்ட தினங்கள்:** 15, 16, 17 ;



## கன்னி

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

கிரகநிலை - ராசியில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி (வ) - களத்திர ஸ்தானத்தில் ராகு - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய், குரு - தொழில் ஸ்தானத்தில் சந்திரன் - லாப ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன்

கிரகமாற்றங்கள்: 01-08-2024 அன்று சுக்கிரன் லாப ஸ்தானத்தில்


முக்கியத்துவம் அளிப்பவர்கள். இந்த மாதம் எதிலும் கவனமாக இருப்பது நன்மை தரும். சுக்கிரன் சஞ்சாரம் பணவரவை அதிகப்படுத்தும். பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியம் கைகூடும். புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும். தந்தையுடன் அனுசரித்து செல்வது நல்லது. பூர்வீக சொத்துக்கள் மூலம் வரவேண்டிய லாபம் தாமதப்படும்.

தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் பெற கடினமாக பணியாற்ற வேண்டி இருக்கும். புதிய ஓர்டர்கள் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். முயற்சிகள்

தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். அரசியல்துறையினருக்கு கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். மேலிடத்திடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது. வீண் அலைச்சல், தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளி போடுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற அதிக ஈடுபாட்டுடன் படிப்பது நல்லது. வீண் அலைச்சல் ஏற்பட லாம்.

உத்திரம் 2, 3, 4 பாதங்கள்: இந்த



ஒத்துழைப்பும் இருக்கும்.

சித்திரை 1, 2 பாதங்கள்: இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்க ளுடன் ஏதாவது ஒருவகையில்

## உழைப்பினால் வாழ்வில் வளம் பெறும் கன்னி இராசியினரே

இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 16-08-2024 அன்று சூரியன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26-08-2024 அன்று சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார் ; 26-08-2024 அன்று செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 31-08-2024 அன்று புதன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

பலன்கள்: நீங்கள் உணவிற்கு

எதிர்பார்த்த பலன் தராமல் போகலாம். வீண் அலைச்சல் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களின் ஆலோசனை கேட்டு எதையும் செய்வார்கள்.

கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். பிள்ளைகளுடன் அனுசரித்து செல் வது நல்லது. பெண்கள் எதிலும் முழுகவனத்துடன் ஈடுபடுவது நன்மையைத் தரும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். கலைத்துறையினருக்கு மற்றவர்க ளுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில்

மாதம் வீண்கவலை ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உங்களது சொத்து தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படும். பக்தியில் நாட்டம் அதிகமா கும். நெருங்கிய நண்பர்களிடம் மனஸ்தாபம் ஏற்படலாம்

அஸ்தம்: இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பார்ட்னர்கள் மற்றும் வாடிக்கை யாளர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பளு ஏற்பட்டாலும், எப்படியாவது செய்து முடித்து விடுவீர்கள். சக ஊழியர்கள்

வாக்குவாதம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபம் உண்டாகும். சகோதரர்களிடம் கருத்து வேற்றுமை ஏற்படலாம். வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும்.

**பரிகாரம்:** புதன்கிழமையில் அருகில் இருக்கும் காவல் தெய்வத்தை வணங்க மனதில் இருந்த குழப்பம் நீங்கி நிம்மதி உண்டாகும். கடன் பிரச்சினை தீரும்

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, புதன், வெள்ளி **சந்திராஷ்டம தினங்கள்:** 24, 25 ; **அதிர்ஷ்ட தினங்கள்:** 18, 19 ; (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 176 கிலோ...

குட்பட்ட வலைப்பாடு எருமைத் தீவு கடற்பரப்பில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான படகினைச் சோதனை செய்த போது படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 176 கிலோ கஞ்சாவினை மீட்டதோடு மூன்று சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்து ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த 22 வயது, 36 வயது மற்றும் 34 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று அவர்கள் கிளிநொச்சி நீதி மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-7,316)

## குடும்பஸ்தரின்...

வாசிகளால் தகவல் வழங்கப்பட்டதை யடுத்து நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் திருகோணமலையினை சேர்ந்தவர் எனப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், உயிரிழந்த நபர் கடற்றொழிலாளர் என்றும் அவர் எவ்வாறு உயிரிழந்தார் என்பது தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் தெரியவில்லை என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## சந்நிதியானுக்கு...

இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகவுள்ளது.

கைலாச வாகன உற்சவம், 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளதுடன், சப்பறத் திருவிழா 17ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கும், தேர்த்திருவிழா 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும், தீர்த்தத்திருவிழா 19ம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ம-7)

## யானை...

என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா வடக்கு கற்குளம்பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் வசிக்கும் குறித்த குடும்பஸ்தர் நீண்ட நேரமாகியும் மகன் வீடு திரும்பாமையால் இரவு 10.30 மணியளவில் மகனைத் தேடி கிராம வீதியூடாக சென்றபோதே வீதியில் நின்ற யானை தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார். (ம-7,250)

## ஹயஸ்...

யில், சுன்னாக சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பெண்களை, ஹயஸ் ரக வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் ஹயஸ் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சுன்னாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## தமிழக மீனவரின்...

கொண்டு செல்லப்பட்டது.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புதன்கிழமை கடலுக்குச் சென்ற விசைப்படகை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது அவர்களை கைது செய்ய இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் சென்ற நிலையில், அங்கு ஏற்பட்ட விபத்தையடுத்து மீன்பிடி படகிலிருந்து மலைச்சாமி (வயது-59) என்ற மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்ததுடன், ராமச்சந்திரன் (வயது-64) என்ற மீனவர் கடலில் மூழ்கி மாயமாகி உள்ளார்.

மேலும், முத்து முனியாண்டி, மூக்கையா ஆகிய இரண்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் உள்ள கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை மதியம் முத்து முனியாண்டி, மூக்கையா ஆகிய இரண்டு மீனவர்கள் வழக்குப் பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், இரண்டாவது நாளாக நடுக்கடலில் மாயமாகிய மீனவர் ராமச்சந்திரனை தேடும் பணிகளும் கடற்படை ஹெலிகொப்டர், கடலோர காவல்படையின் ரோந்துப் படகுகளின் மூலம் தொடர்ந்து நடைபெற்றது. (ம-7)

## மன்னார் மகப்...

வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மன்னார் பொது வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தியதாக மன்னார் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று காலை மருத்துவர் அர்ச்சுனா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் மன்னார் வைத்தியசாலைப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) இராமநாதன் அர்ச்சுனா என்பவர் இருவரை அழைத்து கொண்டு உரிய அனுமதியின்றி வைத்தியசாலைக்குள் நுழைந்து அங்கு பணியாற்றிய வைத்தியர்களுடனும் ஊழியர்களுடனும் தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் அதனைத் தொடர்ந்து வைத்தியசாலை பொலிஸாருக்கும் காவலாளர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்துபவர்களை உள் அனுமதிக்க வேண்டாம் என தான் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

ஆனாலும் அவர் மகப்பேற்று விடுதிக்குள் அனுமதி இன்றி நுழைந்து அங்கிருந்த பெண் நோயாளர்கள் மற்றும் பெண் வைத்தியர்களுடன் தர்க்கம் புரிந்ததுடன் அவர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் மகப்பேற்று விடுதியினுள் பிரச்சினை ஏற்படுத்தும் முகமாக வைத்தியரின் அறைக்குள் சென்று புகைப்படம் எடுத்ததாகவும், வீடியோ எடுத்ததாகவும் இதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

மேலும் மன்னார் பொது வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் வைத்தியர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு குறித்த வைத்தியருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளதாகவும் தற்போது குறித்த விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து மருத்துவர் அர்ச்சுனா நேற்று சனிக்கிழமை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## எமது ஆட்சியில்...

கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், திருடர்களைப் பிடிக்கவும், திருடர்களை விரட்டவும், திருடப்பட்ட பொருட்களை நாட்டுக்குத் திருப்பியனுப்பும் பாரிய மனிதாபிமானப் பணியின் ஒரு அங்கமாக மாறுவதற்கு அனைவரும் ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார். (ம-7)

## தயாசிறி...

கலந்துரையாடியதன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (ம-7)

## தேர்தல்...

பெரும்பாலான சம்பவங்கள் இடம் பெற்றுள்ள தாக, பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.08.03
சீட்டிழுப்பு இலக்கம் 5554
B 5 5 8 0 5 1
அத சம்பத B 8 0 5 1
சீட்டிழுப்பு இலக்கம் 129

தன நிதானய
திகதி - 2024.08.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1584
S 22 43 48 55 S
60685

மெகா பவர்
திகதி 03/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1902
C 07 08 52 73 79
43477

லக்கி 7 VIP
திகதி 2024.08.03
சீட்டிழுப்பு இலக்கம் 0380
S 0 8 2 6 4 3 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3796
சீட்டிழுப்பு திகதி 03.08.2024
U 22 45 46 59
U 14365

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2024.08.03
சீட்டிழுப்பு இலக்கம் 0863
சிம்மம் 02 25 30 31 சிம்மம்
82782 02

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.08.2024 வெற்றி வாரம் 262 வர்ணம் நீலம்
P 0 2 0 8 4 8
47292
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,898,240.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2528 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 03.08.2024 தினம் சனிக்கிழமை
07 11 25 55 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 102,540,384.00

சனிதா
திகதி 2024.08.03 வெற்றி வாரம் 4689
02 03 45 73 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,282,802.00
6 7 0 4 1

சீட்டிழுப்பு வாரம் 4240 வர்ணம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.03 தினம் சனிக்கிழமை
31 38 46 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,341,053.60
179445

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 29 14 45 57 67
1704 சிவப்பு 03.08.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 536,899,785.80

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2354
சீட்டிழுப்பு திகதி : 2024.08.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,791,019.20
15 44 45 72 U
292090


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயற்காணி விற்பனைக்கு

பூநகரி பரந்தன் வீதியில் ஏழரை ஏக்கர் வயற்காணி விற்பனைக்குள்ளது.
இரு போகம் செய்யக்கூடிய வயற்காணி.

**077 790 5438**
**021 205 3982**

(1588)

## வீடு வாடகைக்கு

நாவற்குழிச் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்கு உண்டு.

(1602)

தொடர்புகளுக்கு:
**077 33 99 072**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (214)
**074 17 37 684**

## காணி விற்பனைக்கு

Rajeswary Homes PVT LTD
தெல்லிப்பளை நகரை அண்மித்த டச்சு வீதியில் 1 ½ பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட, சீரமைக்கப்பட்ட 20 அடிப்பாதையுடன் 9 காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
(UDA,பிரதேசசபை அனுமதிபெறப்பட்டது.)

(C-920)

தொடர்பு: **077 076 7114**

## மணமகள் தேவை

யாழ். இந்து 1977 ம் ஆண்டு உத்திரட்டாதி மீனம் கி.பா 17 1/4 சொந்தமாக தொழில் செய்யும் மணமகனிற்கு மணமகள் தேவை.

(1605)

தொடர்புகளுக்கு:
**076 739 9692**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(1489)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**

## பணியாளர் தேவை

சைவசமய நிறுவனம் ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை.G.C.E A/L படித்த கணனி அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு (1617)
**076 132 5186**

## JOB VACANCY

இலங்கையில் பிரதானமாக பிரிண்டிங் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனத்திற்கு விற்பனை நிர்வாகிக்கான வேலை வாய்ப்புகள் உள்ளது.
சந்தைப்படுத்தல் அனுபவமுள்ள 18-35 வயதுக்கு உட்பட்ட, செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் உடனடியாக பணியமர்த்தப்படுவார்கள். தமிழ் மொழி தவிர சிங்களம் மற்றும் ஆங்கிலம் பேசுவது கூடுதல் தகுதியாகும். கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கொமிஷன் வழங்கப்படும். தகுதியானவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

(1609)

தொடர்புகளுக்கு :
**077 841 6745/ 077 366 7831**

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

*IELTS Lifeskills A1 (UK Spouse Visa exam)
*Dutch(டச்) - Netherland/Holand - Classes
*IELTS Academic & General / IELTS UKVI
வகுப்புகள் நடைபெறுகின்றன. (1585)

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447 / 0217200989
கிளைகள் –
சாவகச்சேரி/வவுனியா/புதுக்குடியிருப்பு

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் A9 வீதியிலிருந்து 75 மீற்றர் தூரத்தில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. ஹோட்டல், திருமணமண்டபம், மாடி வீடு அமைக்க உகந்தது. நல்ல தண்ணீர்க் கிணறு, இரு வழிப்பாதையும் உள்ளது.

**077 790 5438**
**021 205 3982**

(1588)

## கணனி தட்டெழுத்தாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளும் தட்டெழுத்துச் செய்யக்கூடிய அனுபவமுள்ள கணனி தட்டெழுத்தாளர் தேவை.

தொடர்புகளுக்கு: (1588)
**077 777 7704**

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Online Visa Appoinments
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
- Travel Insurance
- Travel Itinerary

(C-0922)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)

(C-0922) CIMS College
49A, Chapel Street,Jaffna.

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

(C-0922)

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1597)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
**077 814 7389**
**077 986 5457**

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

(C-918)

தொடர்புகளுக்கு: **076 315 6470**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 243/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 199/= | |
| 1 Kg பொன்னி அரிசி | - 278/= | |
| 1 Kg சம்பா அரிசி | - 228/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 760/= | |
| 1 Kg சர்க்கரை | - 260/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg சவ்வரிசி | - 520/= | |
| 01 சன் பப்படம் | - 185/= | ~~235/=~~ |
| 1 Kg கட்டி உப்பு பக்கற் | - 80/= | ~~115/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |

No Limt
400g Anchor
1010/=
~~1050/=~~

அங்கர் பால்மா மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (223)

Happy Supermarket
**0777 8080 30**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org